Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-1639)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 07 (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :05

## இராணுவ வாகன விபத்தின் எதிரொலி

# பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டம்

# நேற்றைய மோதல்களில் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் - தண்ணீர் தாங்கியடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இராணுவ ட்ரக் வண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தின்போது, இரு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, நேற்றைய தினமும் தண்ணீர் தாங்கியடி மற்றும் கோண்டாவில் போன்ற பகுதிகளில் மக்கள் வீதிகளில் இறங்கி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது இராணுவத்தினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டு, குண்டாந்தடிப் பிரயோகத்தில் பலர் காயமடைந்தனர்.**


நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் தண்ணீர் தாங்கியடியில் இடம்பெற்ற வீதி விபத்தின்போது, இரு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இராணுவத்தினர்- குண்டுகளை, ஆயுதங்களை வைத்து மக்களின் மறியற்போராட்டங்களை நிறுத்தி அங்கிருந்து வெளியேறுமாறு அச்சுறுத்தினர்.

இதனால் - ஆத்திரம் கொண்ட மக்கள் - இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேறுமாறு கோரி முகாமை நோக்கி கற்களையும், கண்ணாடி போத்தல்களையும் வீசியபடி முன்னேறிக்கொண்டிருந்தனர்.

இவர்களைக் கட்டுப்படுத்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசினர். இதனால், அங்கிருந்து மக்கள் சிறிது நேரம் அந்தப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம்



இது தான் மக்கள் போராட்டம் பாருங்கோ....!



யாழ்.தண்ணீர்த் தாங்கியடியில் இடம்பெற்ற மறியற் போராட்டத்தில் - கலகத் தடுப்புப் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களைப் படத்தில் காணலாம். (மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)

# குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றாவிட்டால் ஒரு வாரத்துக்குள் தெற்கிலிருந்து படையெடுப்பாம்!

## சிஹல உறுமய எச்சரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள

கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த முகாம் அரச கட்டுப்பாட்

உறுமய மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் 17 முகாம்களை

# படையினருக்கு எதிரான போராட்டம்; கலகங்களில் காயமுற்றவர்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தண்ணீர் தாங்கியடியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்திற்கு

தாக இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் 11

மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டு, குண்டாந்தடிப் பிரயோகத்தில் பலர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் தண்ணீர் தாங்கியடியில் இடம்பெற்ற வீதி விபத்தின்போது, இரு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இராணுவத்தினர்- குண்டுகளை, ஆயுதங்களை வைத்து மக்களின் மறியற்போராட்டங்களை நிறுத்தி அங்கிருந்து வெளியேறுமாறு அச்சுறுத்தினர்.

இதனால் - ஆத்திரம் கொண்ட மக்கள் - இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேறுமாறு கோரி முகாமை நோக்கி கற்களையும், கண்ணாடி போத்தல்களையும் வீசியபடி முன்னேறிக்கொண்டிருந்தனர்.

இவர்களைக் கட்டுப்படுத்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசினர். இதனால், அங்கிருந்து மக்கள் சிறிது நேரம் அந்தப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றாவிட்டால் ஒரு வாரத்துக்குள் தெற்கிலிருந்து படையெடுப்பாம்!

## சிஹல உறுமய எச்சரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள குரங்குப்பாஞ்சான் முகாமை ஒரு வார காலத்துக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால், தெற்கில் இருந்து படையெடுப்பு இடம் பெறும் என்று சிஹல உறுமய கடசி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் அறிவித்திருப்பதாக சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த முகாம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள போதிலும், விடுதலைப் புலிகளுக்கு சார்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு செயற்படுவதாக அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முகாமை அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது யுத்தநிறுத்த மீறல் அல்ல என, சிஹல உறுமய மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் 17 முகாம்களை அமைத்துள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சர் இந்தப் பிரதேசத்துக்கு விஜயம் செய்தால், இந்த முகாம்களை அவருக்கு காண்பிக்கமுடியும் என்றும் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)



யாழ்.தண்ணீர்த் தாங்கியடியில் இடம்பெற்ற மறியற் போராட்டத்தில் - கலகத் தடுப்புப் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களைப் படத்தில் காணலாம். *(மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)*

# படையினருக்கு எதிரான போராட்டம்; கலகங்களில் காயமுற்றவர்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தண்ணீர் தாங்கியடியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதனைக் கண்டித்தும் இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்ற மறியல் போராட்டத்தின்போது, ஆக்ரோஷமடைந்த மக்கள்- மேற்கொண்ட கல்வீச்சு மற்றும் கண்ணாடிப் போத்தல்கள் வீசியதில் 3 பொலிஸார் காயமடைந்ததாக இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் 11 பொது மக்கள் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் கோண்டாவில் சந்தி, டிப்போ சந்தி ஆகிய இடங்களில் மறியற் போராட்டத்தில் ஈடுபட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை எதிர்த்து சுதந்திரக்கட்சி நேற்று மறியல் போராட்டம்

அரசாங்கம் மேற்கொண்டுவரும் வாழ்க்கைச் செலவு உயர்வு, தனியார் மயமாக்கல் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து சுதந்திரக் கட்சி நேற்றையதினம் மறியற்போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

நேற்று பிற்பகல் எம்பிலிப்பிட்டி நகரில் இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது.

அரசாங்கத்துக்கு எதிராக நடைபெற்ற மறியற்போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு - ஆரையம்பதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதி பொதுச்சந்தை வாயிலில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சுப்பிரமணியம் கிருபாகரன் (வயது 36) என்பவர் உயிரிழந்தார்.

கொல்லப்பட்டவர் முன்னாள் ரெலோ இயக்க உறுப்பினர் என்றும், இவர் சிலகாலம் வரதர் அணியின் உறுப்பினராக இருந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் அதில் இருந்து விலகி, ஆரையம்பதி பொதுச்சந்தையில் முச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் கடமைபுரிந்துவந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுச்சந்தையில் நின்றபோது அவர் இருவரோடு கதைத்ததாகவும், ஒருவர் நாடியில் கைத்துப்பாக்கியை வைத்து தலைப்பக்கமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீர்த் தாங்கியடியில்

# குவிக்கப்பட்டுள்ள இராணுவம், பொலிஸாரை உடனடியாக விலகுமாறு இளம்பருதி கோரிக்கை!



(யாழ்ப்பாணம்)

யாழ். தண்ணீர் தாங்கியடியில் அடாவடித்தனங்களில் ஈடுபடுவதற்காக குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரையும், பொலிஸாரையும் உடனடியாக விலக்கிக்கொள்வது அமைதியைப் பேணுவதற்கான அடிப்படைச் செயற்பாடாகும் என, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வலியுறுத்தியுள்ளார்.

யாழ். பிரதான சாலையில் தண்ணீர தாங்கியடியில் இடம்பெற்ற இராணுவ கனரக வாகனம் - மோட்டார் சைக்கிள் விபத்தினையும், அதனைத் தொடர்ந்து இராணுவமும், பொலிஸாரும் மேற்கொள்ளும் அத்துமீறல்களை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் எடுத்துக்கூறி, கண்டனம் தெரிவித்துள்ளார்.

இக்கோர விபத்துச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து இராணுவ கனரக வாகனத்தையும், இறந்த இருவரது உடல்களையும் மற்றும் குறித்த மோட்டார் சைக்கிளையும் - இராணுவமும், பொலிஸாரும் கூட்டாக மக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் - படை உயர் அதிகாரிகள் மட்டக்களப்பில் சந்திக்கவுள்ளனர்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், படை உயர் அதிகாரிகளுக்குமிடையிலான உயர்மட்ட சந்திப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுணதீவு செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புலிகள் தரப்பில் சிறப்புத்தளபதி ரமேஷ், அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் உயர்மட்ட உறுப்பினர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

படைத்தரப்பில் மட்டக்களப்பு வாழைச்சேனை கட்டளை அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226207
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1423)



















நேற்றுமுன்தினம் யாழ்.தண்ணீர்த் தாங்கியடியில் இடம்பெற்ற விபத்தில் பலியான கோண்டாவிலைச் சேர்ந்த லிங்கரூபனின் மரணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கோண்டாவில் பகுதியில் அப் பகுதி மக்கள் வீதியை மறித்து மறியலில் ஈடுபடுவதனை கீழ் உள்ள படங்களில் காணலாம்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இராணுவ ட்ரக் மோட்டார் சைக்கிள் மீது மோதிய விபத்தின் தொடர்ச்சியாக நேற்றும் தண்ணீர்த் தாங்கியடியில் மக்கள் மறியலில் ஈடுபட்டிருப்பதனையும் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், கண் காணிப்புக்குழுவினர் ஆகியோர் சம்பவ இடத்தில் கலந்துரையாடுவதனையும், சம்பவ இடத்திற்கு வருகைதந்த நீதிபதி பொலிஸாருடன் கலந்தரையாடுவதையும், அப் பகுதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கையினை மேற்கொள்வதையும் மறியலில் ஈடுபட்டிருந்த பொதுமக்களை சிப்பாய் ஒருவர் வீடியோப் படம் எடுப்பதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

படங்கள்: சர்வேஸ், ராஜ்குமார்.


FOLIAR - FLOWER - FRUIT

GREEN PARK

WE UNDERTAKE

Video Coverage, Children Carnival, Parties, Weddings, Seminars in Peaceful & Natural Environments with Park Scenery.

NOW ON SALE

All Varieties of plants & Flowers

உங்கள் அபிமானத்திற்குரிய 'கிறீன் பார்க்' என்னும் எழில்மிகு பூஞ்சோலைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள். உங்கள் குழந்தைகள் மகிழ்ச்சியோடு விளையாடுவதற்கும், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் கொண்டாட்டம் போன்றவற்றிற்கு வீடியோ படிப்பிடிப்பு செய்யவும், பலர்கூடி அமர்ந்து ஆலோசனைகள் நடத்தவும் யாழ்.நகரில் சிறந்த இடம். எமது ஸ்தாபனத்தில் பலதரப்பட்ட பூஞ்செடி கொடிகளும், மரக் கன்றுகளும் கிடைக்கும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

S.Pakkianathan

T.P:- 021-222-6563 "GREEN PARK", 152/2 Temple Road, Jaffna.

(சி-1643)

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்றுமுதல்

மாதவன், சிம்ரன், சிநேகா நடித்த

பார்த்தாலே பரவசம்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

STRATEGIC COMMAND

(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.

பிரசாந், கிரண், நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1619)

# சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி, பனசொனிக் டெக்குகள் (புதியது) மரத்தால் செய்யப்பட்ட வீடியோ கசற் விறாக்கி, கண்ணாடி சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு:- 235/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (499)

### சித்திரக் கலை O/L,A/L

வார நாட்களில் சித்திரபாட துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகிறது. நேரம் 3.30-5.30. இவற்றுடன் பெண் அலங்காரம், கேக்ஐசிங், உடை அலங்காரம் என்பவற்றுக்கான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அருண் கலைக்கூடம்,தேவாலய வீதி, சண்டிலிப்பாய். குககிருபை (மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்) யாழ் வீதி, மானிப்பாய். (497)

### கணக்கியல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் A/L கணக்கியல், O/L வணிகக் கல்வியும் கணக்கீடும் தனி ஒருவருக்கோ, குழுக்களுக்கோ அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு:- 0776 160235 (சி-1641)

### மலிவு விற்பனை

பத்து ரூபாவாக விற்ற மில்க்வைற் சோப் 6/= ரூபாவாக மொத்தமாகவும், சில்லறையாகவும் எமது வாகனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்

த.பெ.இல 77

யாழ்ப்பாணம். (சி-1640)

# சமஷ்டி அடிப்படையிலான தீர்வே இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானது

## அவுஸ்திரேலிய தூதுக்குழுத் தலைவர் தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே சரியானதும், நிரந்தரமானதுமாக இருக்கும் என்று, அவுஸ்திரேலியாவிலிருந்து, இலங்கைக்கு வருகைதந்துள்ள தூதுக் குழுவின் தலைவர் ஜோன் வொட்சன் தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான, பொருளாதார, அபிவிருத்தி முன்னெடுப்பு நிலைமைகளை அவதானிக்கவென, அவுஸ்திரேலியாவிலிருந்து உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, நால்வரடங்கிய குழுவொன்று கொழும்புக்கு வந்துசேர்ந்துள்ளது.

இந்தக் குழுவினரை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் மைப்பு விவகாரக்குழு, புதன்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடியது. அந்தச் சமயமே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரால் ஒழுங்குசெய்த இந்தச் சந்திப்பு, உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு சமஷ்டி முறையில்தானுள்ளது.

அந்த முறைமைதான் அந்தந்த நாடுகளின் பிரச்சினைகளுக்கேற்றவாறு வளைந்து, நெளிந்து கொடுக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்றது. இந்த முறைமையின் மூலம், இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கும் நியாயமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி தெரிவிக்கையில் - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெறும் சமாதான பேச்சுவார்த்தையில் - முஸ்லிம்களைத் தனியொரு தரப்பாகப் பங்கு பற்ற இடமளிக்க வேண்டுமென, வலியுறுத்தி வருகின்றோம். அதற்கான காரணங்களையும், தேவைகளையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புகளை அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். எமது கடந்தகால அனுபவங்களையும், எமது அச்சங்களுக்கான காரணங்களையும் அவர்களுக்கு விபரித்தோம். அத்தோடு முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள நிலவரங்கள் குறித்த அறிக்கையொன்றையும், அவர்களிடம் கையளித்தோம் என்றார்.

# உயர்தர மாணவர்களிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதல் தீர்த்து வைக்கப்பட்டது

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களிடையே, கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்று வந்த கோஷ்டி மோதல், நேற்றுமுன்தினம் தீர்த்து வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை பாடசாலை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாடசாலை அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, கல்விப்பணிப்பாளர், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்- இராஜகுகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் மாணவர்களின் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய எழிலன் - எமது கலை, பண்பாடுகளை மதித்து நடக்கவேண்டிய மாணவர்களே அதனைத் தவிர்த்து, இப்படியான சம்பவங்களில் ஈடுபடுவது விரும்பத்தக்க செயலல்ல. முன்னரும் இந்தப் பாடசாலையில் இப்படியான ஒரு சம்பவம் நடந்து ஒரு உயிர்ப்பலியானது. சில தீய சக்திகள் - மாணவர்களின் பின்னே இருந்து ஊக்குவிப்பதனை நாம் அனுமதிக்க முடியாது. இவ்வாறான சம்பவங்கள் தொடருமாக இருந்தால், நாம் கடுமையான நடவடிக்கை எடுப்பது தவிர்க்கமுடியாதது. இதற்குப் பெற்றோர் தமது பூரண ஒத்துழைப்பைத் தரவேண்டும். இளம் சமூகம் இவ்வாறு அழிவுப்பாதையில் செல்வதனை நாம் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாடசாலை நிர்வாகத்தினர், மாணவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தாலும், தமது ஆதரவைத் தெரிவிப்போம் என்று தெரிவித்தனர். மாணவர்களின் பெற்றோரும், மாணவர்களுக்கு எதிராகக்கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டனர். வவுனியாவில் நடைபெற்ற இசைக் கச்சேரியில் ஏற்பட்ட சிறுமோதலே, இந்தப் பாடசாலை மாணவர்களின் கோஷ்டி மோதலுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (03)

## அம்பாறை மாவட்டத்தில்

# புலிகளால் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் தொடர்பாக கண்காணிப்புக்குழு விசாரணை!

அம்பாறை மாவட்டம் - பூவக்குளம் பாவட்டை என்னும் இடத்தில், விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடம் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணை நடத்தி வருகின்றது.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் விடுதலைப் புலிகள் கட்டடம் நிர்மாணித்து வருவதாகவும், இது போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் என்று, விசேட அதிரடிப்படையினர் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து, இந்த விசாரணையை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, விசேட அதிரடிப் படையினரால், தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

குறிப்பிட்ட பிரதேசம் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதென்றும், இது சம்பந்தமாக வரை படத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்குச் சமர்ப்பித்திருப்பதாகவும், போர்நிறுத்த கண்காணிப்புக்குழு வர முன்புகூட, தாங்கள் நிலை கொண்டிருந்த குறிப்பிட்ட இடத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடம் முகாமல்ல, சந்திப்புக்களுக்கான மண்டபம் என்றும், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா தெரிவித்தார்.

இது தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு -விடுதலைப் புலிகள் மண்டபம் ஒன்று அமைத்து வருவதாகவும், கட்டட நிர்மாணத்தின் சட்டபூர்வத்தன்மை பற்றி ஆராய்ந்த பின்புதான், தமது தீர்மானத்தைத் தெரிவிக்க முடியும் என்றும், மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

## திருமலையில் கொள்ளை

திருகோணமலைக்கு மேற்கேயுள்ள மதுபான நிலைய காசாளரிடமிருந்து விற்பனை முடிந்து வரும் வேளையில்- பணமும், அவரது மோட்டார் சைக்கிளும் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு 9.30 மணிக்கு அபயபுரம் அன்புவழிச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, பிரசன்னா புஷ்பகுமார என்பவருக்கு சொந்தமான மதுபான நிலையத்தில் காசாளராக கடமையாற்றும் எல்.ஜி.ஏச்.அசோககுமார விற்பனையை முடித்து இரவு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் அபயபுரம் சந்தியில் வைத்து ரி.56 ரக துப்பாக்கி வைத்திருந்த மூன்று இளைஞர்களினால் பணமும், மோட்டார் சைக்கிளும் அபகரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட இவர், துப்பாக்கி வைத்திருந்த மூவரில் ஒருவர் தன்னை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் தெரிவித்தார். (04)

## சட்டமா அதிபர் உத்தரவு

காணமற்போன இராணுவச் சிப்பாய் தொடர்பாக அவரது தந்தை மேன்முறையீட்டு நீதிமன்றில் செய்த முறைப்பாட்டையடுத்து இது தொடர்பாக உடனடியாக விசாரணை செய்து அதன் அறிக்கையினை எதிர்வரும் 14 ஆம் திகதி முன்பதாக சமர்ப்பிக்கும்படி சி.ஐ.டியினருக்கு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

மேஜர் நந்தமல்லவராச்சி என்ற இராணுவ அதிகாரிக்கு பாதுகாப்பாக சுகத் ஜெயவிக்கிரமசிங்க எனற இராணுவச் சிப்பாய் கடமை புரிந்ததாகவும், காணி தொடர்பான பிரச்சினையொன்றின் பின்பே மேற்படி இராணுவச் சிப்பாய் காணமற்போயுள்ளார்.

# சிங்களவர், தமிழர் ஒற்றுமையால் நிறையவே சாதிக்க முடியும்!

## அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லங்ஸ்ரீட்

தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து செயற்படும் விதத்தை நோக்கும்போது, அமைதியான இலங்கையில் இதனைவிட பெரிய விடயங்களைச் சாதிகக் கூடியதாகவுள்ளதென அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லங்ஸ்ரீட் தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்களால் கடந்த மே மாதம் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதியுதவியுடன் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்விலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்காக இந்த நிறுவனம் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கான நிதியுதவிகளையும் அமெரிக்கத் தூதுவர் வழங்கினர்.

# தபால் நிலைய நிர்மாணப் பணிகள் நவம்பரில் பூர்த்தி செய்யத் திட்டம்!

(கொழும்பு)

வடபகுதியில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் தபால் நிலையங்களின் நிர்மாண வேலைகளை, எதிர்வரும் நவம்பர் மாதம், 15 ஆம் திகதிக்குமுன் பூர்த்திசெய்யுமாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அஞ்சல் அதிபதிக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

யாழ்.பிரதம தபால் நிலையம் உட்பட, மேலும் ஐந்து தபால் நிலையங்கள் வடபகுதியில் அஞ்சல் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், யுத்தத்தினால் சேதமுற்ற பத்து தபால் நிலையங்களும், தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. புனரமைக்கப்பட்டுவரும் இந்தத் தபால் நிலையங்களுக்காக பத்து இலட்சம் பெறுமதியான உபகரணங்களும், தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உபதபால் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதியைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நிர்மாணிக்கப்பட்டுவரும் தபால் நிலையங்களைத் திறந்து வைக்கவுள்ளார். இலங்கையின் முதற்தர தபால் நிலையமாக, யாழ்ப்பாண பிரதம தபால் நிலையம் பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# அஞ்சல் தினத்தை முன்னிட்டு திருமலையில் நடமாடும் சேவை!

(திருகோணமலை)

உலக தபால் தினத்தை முன்னிட்டு, நேற்று திருகோணமலை அஞ்சல் அத்தியகட்சகர் அலுவலகத்தில் நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் திருகோணமலை பாடசாலைகளைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு தபால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை தபால் நிலையத்தில் - தபாலக ஊழியர்களுக்கு தாபனக்கோவை வழங்கப்பட்டதோடு, சிறப்புத் தேர்ச்சி தொடர்பான கருத்தரங்கும் இடம்பெற்றது. (04)

# அதிகார பரவலாக்கலை கைவிட்டால் சுதந்திரக் கட்சியுடன் மீண்டும் பேச்சு!

## ஜே.வி.பி. தெரிவிப்பு

அதிகாரப் பரவலாக்கலைக் கைவிட்டால் மாத்திரமே சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாட்டின் நலனைக் கருதி ஏனைய விடயங்கள் இரண்டாம் பட்சமாகக் கருதப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்குச் சிறந்த கொள்கை ஒன்று அவசியமானது. அதனடிப்படையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியும் என்றும் கூறினார்.

மாத்தளை உயர்கொத்த விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# எண்ணக் கருத்துக்களில் மாற்றம் செய்யாமல் எந்த வேலைத்திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நன்மையைக் கருதி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மேலும் இளைய சமுதாயம் சிறந்த பிரஜைகளாக செயற்பட வேண்டிய தேவையையும் ஜனாதிபதி நினைவுகூர்ந்தார்.

றோயல் கல்லூரியில் 159 ஆவது வருடாந்த விருது வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

எண்ணக்கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்படுத்தாமல் எந்தவொரு வேலைத்திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு சிறந்த தலைவர்கள் தேவையெனவும் அவர் குறிப்பிட்டார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சித்தியடைகின்ற போதிலும், அவர்களில் 14 ஆயிரம் பேருக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதாகவும் கூறினார்.

1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த எண்ணிக்கை இதனைவிடக் குறைவாக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# அரசாங்க ஊழியர்களுக்கான மேலதிக வேலைநேரம் நிறுத்தம்

(கொழும்பு)

அடுத்த வருடத்திலிருந்து அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிக நேரவேலை எதுவும் வழங்கப்படமாட்டாது என்று அமைச்சர் வஜிர அபேவர்த்தனா தெரிவித்தார்.

இதனால், அரசாங்க ஊழியர்கள் ஒதுக்கப்பட்ட வேலைகளை அந்தந்த நாளில் நிறைவேற்ற வேண்டிவரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மேலதிக நேரம் முதற்கட்டமாக பொது நிர்வாக அமைச்சு அலுவலகங்களில் அறிமுகப்படுத்தப்படும். இதன் பிரகாரம் அமைச்சு ஊழியர்கள் தமது அலுவலக அதிகாரி முன்னிலையிலுள்ள வரவுப் பதிவேட்டில் இனிமேல் கையெழுத்திடுவார்கள்.

இதனால், ஏற்கனவே வரவைப் பதிவு செய்யும் இயந்திர முறைப் பதிவுகள் நீக்கப்படும் என்றும், அமைச்சர் வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவித்தார்.

அரசாங்க சேவையில் தற்போது 8 இலட்சம் பேர் கடமையாற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்று கோரிக்கைகள் முன்வைத்து அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

அரசாங்க ஊழியர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 7 ஆம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தவுள்ளார்கள். சாப்பாட்டு நேரத்தின்போது, அந்தந்தத் திணைக்களங்களுக்கு முன்னர் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

இதேநாளில் பிற்பகல் 4.30 மணியளவில் கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்பாகவும், ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ற சம்பளவுயர்வு, ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவது தொடர்பான சட்டத்தை நீக்குவது அரசாங்க நிறுவனங்கள் தனியாருக்கு விற்றல் ஆகிய கோரிக்கைகளை வைத்தே, இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# சிறுவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம்

## யாழ். பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள தேவாலயங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள சிறுவர்களுக்கு, உதவி வழங்குவது பற்றி சமூகத்திலுள்ள அனைவரும் ஆராய வேண்டும் என யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரி அஹெக்டர் தர்மசிறி கேட்டுக் கொண்டார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சென்பீற்றர் மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

நிகழ்விற்கு வருகை தந்துள்ள சிறுவர்களில் பலர் - உறவுகளை இழந்து, தாய், தகப்பனை இழந்து இருக்கக்கூடும். அவ்வாறானவர்கள் தம்மை அனாதைகள் என்றோ, தமக்கு எவரும் இல்லை என்றோ நினைக்கக் கூடும். அவ்வாறு எண்ணுவது தவறு.

அவர்களை அவ்வாறு எண்ண விடுவது சமூகத்தில் இருப்பவர்களுக்கு முறையல்ல. உலகில் பிறந்த அனைவருக்கும் சமமான உரிமை உண்டு.

உங்களுடைய பாதுகாப்பு சம்பந்தமாகப் பொலிஸாராகிய நாம் நடவடிக்கைகளை என்றும் எடுப்போம்.

சில பெரியவர்கள் நடந்து கொள்ளும் முறைகளால், சின்னஞ் சிறுவர்கள் சீர்கெட்டநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அவ்வாறான பெரியவர்கள் தம்மைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

சிறுவர்கள் முயற்சி செய்தால் முடியாதது எதுவுமில்லை. ஆகவே, அனைவரும் முயற்சி செய்து படித்து நல்லநிலைக்கு வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய காங்கேசன்துறை மகளிர் சிறுவர் பிரிவு பொலிஸ் அதிகாரி நாலிகா டி சில்வா, தனது கருத்தைத் தெரிவிக்கையில் -

சிறுவர்களுக்கு உதவி செய்ய நாங்கள் கடமைப்பட்டு இருக்கிறோம். மற்றைய குடும்பங்களில் இருக்கும் சிறுவர்கள்போல், நீங்களும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.


அத்துடன், உங்களுக்கு எந்த பிரச்சினை வந்தாலும், உங்களுக்கு உதவிசெய்ய நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

உங்களை யாராவது பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினாலோ, உங்கள் முகத்திலோ அல்லது நெஞ்சிலோ அல்லது மற்றைய உறுப்புகளிலோ தொட்டலோ உங்களால் அதனைத் தடுக்கமுடியும். அவ்வாறு யாராவது உங்களிடம் தவறாக நடந்து கொண்டால், எங்களுக்கு அறிவியுங்கள்.

அத்துடன், எதிர்காலத்தில் நன்றாகப் படித்து, நல்லநிலைக்கு வரவேணடும். தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பாகுபாடின்றி, அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹரல்ட் அன்ரனியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், யாழ்மாவட்ட பொலிஸ் அதிகாரி ஹெக்டர் தர்மசிறி, யாழ்ப்பாண பொலிஸ் பொறுப்பதிகாரி செனவிரத்ன, காங்கேசன்துறை சிறுவர் மகளிர் பிரிவு பொலிஸ் அதிகாரி நாலிகா டி சில்வா மற்றும் ஆலயப்பங்குத் தந்தை கருணாசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான சிறுவர், சிறுமியர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறை வியாபாரிமூலை இம்புருட்டி சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் மகோற்சவ காலத்தில் 10 நாட்களும் சமய சொற்பொழிவை ஆற்றிய கார்த்திகேசு 'கமலநாதனுக்கு சித்தாந்த வித்தகர் என்னும் படத்தையும் வாழ்த்துமடல் ஒன்றையும் தேவஸ்தான பிரதம குரு மகாகணபதி சிவானந்தராசா குருக்கள் வழங்குவதை படத்தில் காணலாம்.



வல்வெட்டித்துறை மாவட்டவைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நெடுந்தீவில் நடாத்திய இலவச கண் சிகிச்சை முகாமில் வறிய குடும்ப பெண் ஒருவருக்கு மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் கண்ணாடி வழங்குவதைப் படத்தில் காணலாம். (17)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முதலாவது அகவையில்

பெயர் : ஜெ.மதிராம்,
முகவரி : ஜங்கரன் வீதி, சுதுமலை.

எட்டாவது அகவையில்

பெயர் : தி.அபிராமி,
முகவரி : லண்டன்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------
முகவரி :--------------------
பிறந்த ஆண்டு:--------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்


## நவராத்திரி பேருரை நிகழ்வு

உடுப்பிட்டி கொம்மாந்துறை ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயிலில் நவராத்திரி தினப் பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

விஜயதசமிப் பெருவிழா நடைபெறவிருக்கின்றது. அன்றைய தினம் இரவு 7 மணிக்கு "சக்தி தத்துவம்" எனும் தலைப்பில் கவி மாமணி காரை எம்.பி.அருளானந்தன் நவராத்திரி பேருரை நிகழ்த்தவுள்ளார்.

## வீதி புனரமைப்பு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு - ஈவினைப் பிரதேசங்களை இணைக்கும் ஐயனார் வீதி புனரமைப்பதற்குரிய ஆரம்பவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த 25 வருடங்களின் பின் முதற்தடவையாக இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

# நிரந்தர பேரூந்து தரிப்பிடம் இன்மையால் மக்கள் அவதி

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோயிலடியில் நிரந்தர பேரூந்து தரிப்பிடம் இன்மையால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அறியமுடிகிறது.

இத்துறையில் இருந்தே பயணிகள் எழுவைதீவு, அனலைதீவிற்கு படகுகள் மூலம் பயணம் மேற்கொள்கிறார்கள். இங்கு சில சந்தர்ப்பங்களில் படகுகளை எதிர்பார்த்தும், பேரூந்துகளை எதிர்பார்த்தும் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டிய அவலநிலை பயணிகளுக்கு ஏற்படுவதுண்டு.

அந்த வேளையில் இளைப்பாறுவதற்கும், தங்கியிருப்பதற்கும் போதிய இருப்பிடம் இன்மையால், பலர் வீதியின் அருகுகளில் அமர்ந்திருக்கும்நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டகையில், முகட்டோடுகள் இல்லாமையால், தற்பொழுது ஆரம்பித்துள்ள பருவமழையால் பயணிகள் மேலும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கவும் வேண்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக உரியவர்கள் ஆக்கபூர்வமாக செயறபட்டால் பயணிகள் அசௌகரியங்களை குறைதது்க் கொள்ளலாம்.

# இணுவில் கந்தசாமி கோயில் சமய அறிவுப் போட்டி முடிவு

(உடுவில்)

இணுவில் கந்தசாமி கோயில் இளந்தொண்டர் சபையும், இந்து சமய வளர்ச்சி சங்கமும் இணைந்து நடாத்திய சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. விபரம் வருமாறு.

தங்கப் பதக்கம் பெறுவோர் விபரம் -

ஆரம்பப் பிரிவு -

ஆரணி யோகலிங்கம், (மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பளை.)

கீழ்பிரிவு -

கமலச்சந்திரன் கபீர்த்தனா (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை)

மத்திய பிரிவு -

சோதிநாதன் நிரூசிகா (வேம்படி மகளிர் கல்லூரி)

மேற்பிரிவு -

சிவானந்தம் அஜந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி)

ஏனைய பரிசு பெறும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் முறையே-

தரம் 4 - ச.அருள்பவன் (இணுவில் மத்திய கல்லூரி), சு.சோபிதா (இணுவில் மத்திய கல்லூரி), க.ஜசிந்தா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

தரம் 5 - இ.சோபிகா (ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்), நா.நவநீதம் (இணுவில் மத்திய கல்லூரி), யே.ஆதித்தன் (கொக்குவில் இந்துக்கல்லூரி)

தரம் 6 - அ.அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி), கு.நிரூபிகா (இணுவில் இந்துக்கல்லூரி) செ.சங்கீர்தனா (வேம்படி மகளிர் கல்லூரி),

தரம் 7 - ச.நிசாந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), க.ஜஸ்மிலா (தனிப்பட்ட பரீட்சார்த்தி), சி.பிரபூர்ணா (யூனியன் கல்லூரி)

தரம் 8 - சு.நிலானி (வேம்படி மகளிர் கல்லூரி), க.சஜவன் (மகாஜனாக் கல்லூரி), உ.தனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி)

தரம் 9 - சு.பிரவீனா (வேம்படி மகளிர் கல்லூரி), அ.சர்மிகா (இராமநாதன் கல்லூரி) அ.யசோதா (எவறெஸ்ற் கல்விநிலையம்)

தரம் 10 - தி.கல்யாணி (தனிப்பட்ட பரீட்சார்த்தி), ஸ்ரீ.ரம்ஜா (தனிப்பட்ட பரீட்சார்த்தி) த.பாலரூபன் (தனிப்பட்ட பரீட்சார்த்தி)

தரம் 11 - நா.ரோகினி (வேம்படி மகளிர் கல்லூரி), ப.அஜந்தன் (எவறெஸ்ற் கல்விநிலையம்), அ.அமிர்தலோஜன் (தனிப்பட்ட பரீட்சார்த்தி)

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை இணுவில் இளம் தொண்டர்சபை மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

# ஈவினைப் பிரதேசத்தில் வாழைக்குலை திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

ஈவினைப் பிரதேசத்தில் வாழைக்குலைகள் திருட்டுச் சம்பவம் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நல்லதம்பி கருணாகரன் என்பவருடைய தோட்டத்தில், சுமார் எண்ணாயிரம் ரூபா பெறுமதியான எட்டு வாழைக்குலைகள் களவாடப்பட்டுள்ளன. இங்கு ஐந்து பெரிய கதலி வாழைக்குலைகளும், மூன்று கப்பல் வாழைக்குலைகளுமே திருடப்பட்டுள்ளன.

தற்பொழுது வாழைப்பழத்தின் விலை அதிகளவில் உயர்ந்துள்ளமையால், திருடர்கள் தமது பார்வையை வாழைக்குலைகள் மீது திருப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.


மேலும், இந்தப் பகுதியில் இம்மாதத்தில் இடம்பெற்ற ஆறாவது வாழைக்குலைத் திருட்டுச் சம்பவம் இது என்பதும், இந்த நபருடைய தோட்டத்தில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவம் இது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

# வெற்றி நடைபோடுமா?

இந்திய அணிக்கு ஒரு சச்சின் என்பது போல, இலங்கை அணிக்கு ஒரு அரவிந்த டி சில்வா என்பது போல, தென்னாபிரிக்க அணிக்கு ஒரு கிப்ஸ் என்பதுபோல, அவுஸ்திரேலிய அணிகககு ஒரு ஸ்ரிவ்வோண் என்பது போல, பாகிஸ்தான் அணிக்கு இன்னும் ஆதாரமாக நிற்பவர் இன்சாமம் உல்ஹக்.

33 வயது நிரம்பிய இன்சாமம் - அண்மையில் பங்காளதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட்போட்டியில் உலகத்தரம் வாய்ந்த பாகிஸ்தான் அணி - மிகமிக பின்தங்கிய நிலையில் உள்ள பங்காளதேஷ் அணியிடம் மண்கவ்வி விட்டது என்ற செய்தியை, வராமல் தடுத்துப் பாகிஸ்தான் அணியை வெற்றிப் பாதைக்குக்கொண்டு சென்றார் என்றால், நிச்சயமாக அவரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இறுதி விக்கெட் வரை விடாப்பிடியாக நின்று, ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்களை எடுத்து, ஒரேயொரு விக்கெட்டால் பங்காளதேஷைத் தோற்கடித்து, தோல்வி என்ற பெரும் அவப்பெயரிலிருந்து காத்தவர் இன்சமாம். இதேபோல, இதற்குமுன் பல போட்டிகளில், இன்சாமம் வெற்றிக்குப் பெரும்பங்கு வகித்தவர் என்பது பலரறிந்த விடயம்.

கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் இன்சாமம் படுமோசமாக விளையாட்டினார் என்று, விமர்சனங்கள் தீவிரமாக எழுந்த நிலையில் - இன்சமாம் உல்ஹக், சயிட் அன்வர் உள்ளிட்ட பல மூத்தவீரர்கள் - உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னர் அணியிலிருந்து நீக்கப்பட்டநிலையில், இன்சமாம் மீண்டும் உள்வாங்கப்பட்ட ஒருவர். இன்சமாம் உல்ஹக் மற்றவர் அக்தார்.




## வீழ்ச்சி எழுச்சிக்கே

அமைதியாக, நிதானமாக ஆடுபவராகவும், தேவை ஏற்படின் அதிரடியாகவும் ஆடக் கூடியவராகவும் இருக்கும் இன்சமாம் உல்ஹக் - பாகிஸ்தான் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர்ந்து வருகிறார். அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரிக்கின்ற நிலையில் இன்சமாம் உல்ஹக் நுழைந்துவிட்டால், புதுத்தெம்பு வந்துவிடும். அதன்படி வெற்றிக்கு அதிகம் வலுவாக இருந்தவர் அவரே.

88 டெஸ்ட் போட்டிகளில் (1992 அறிமுகமாகி), பங்குபற்றி 32 அரைச் சதங்கள், 18 சதங்கள் உள்ளடங்கலாக - 6440 ஓட்டங்களைக் குவித்த இன்சமாம், ஒரேதடவை 200 ஓட்டங்களையும் எடுத்துள்ளார். (ஆகக் கூடிய ஓட்டம் 329. சராசரி 49.54. ஆட்டம் இழக்காத போட்டிகளின் எண்ணிக்கை 15. ஓட்டம் எதுவும் எடுக்காத போட்டிகள் 10).

இன்சாமம் உல்ஹக்கின் டெஸ்ட் தரவுகள் உண்மையிலேயே பாகிஸ்தான் அணிக்கு மிகமிகத் திருப்திகரமானதாகவே இருக்கிறது. காரணம் - பாகிஸ்தான் அணிக்குப் பல திறமையான வீரர்கள் இருந்தாலும்கூட, அவர்கள் டெஸ்ட் போட்டிகளில் எனோ திணறுகிறார்கள். இந்தநிலையில் சயிட் அன்வர், யூசப் யுகானா, இன்சமாம் உல்ஹக் போன்றவர்கள்தான் - இன்றும் அதே திறமையும், எதுவித படபடப்பும் இன்றி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

1991 ஆம் ஆண்டு ஒரு நாள் போட்டிகளில் அறிமுகமாகி, இதுவரை 295 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி - 67 அரைச்சதங்கள், 08 சதங்கள் உள்ளடங்கலாக மொத்தம் 9195 ஓட்டங்களைக் குவித்துள்ளார். (அதி கூடிய ஓட்ட எண்ணிக்கை - ஆட்டமிழக்காமல் 137 ஆட்டம். ஆட்டம் இழக்காத போட்டிகளின் எண்ணிக்கை 41. சராசரி ஓட்டம் 38.96. ஓட்டம் எதுவும் எடுக்காத போட்டிகள் 16).

ஒரு நாள் போட்டிகளில் 12 தடவையும், டெஸ்ட் போட்டிகளில் 1 தடவையும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய இன்சமாம் உல்ஹக்கின் பொருத்தமான நிலை, தற்போது 4 ஆவது நிலையாகும். அது மாத்திரம் அல்லாமல், 1 தடவை இவரின் தலைமையில் அணி விளையாடி தோல்வியைப் பெற்றுக் கொண்டது. மற்றும் ஒரு நாள் போட்டிகளில் 7 தடவை தலைமையேற்று, ஏழு தடவையும் வெற்றியை அணிக்குப் பெற்றுக் கொடுத்தவர் என்பது இன்சாமம் பெருமையை மேலும் பறைசாற்றுகிறது.

குண்டான உடலுடன் ஓடமுடியாமல் திண்டாடும் இன்சாமம் - **RUN OUT** முறையில் அதிக தடவை ஆட்டமிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


எது எப்படியோ, பாகிஸ்தான் அணிக்கு ஒரு அனுபவம் வாய்ந்த வீரராகவும், பொறுப்பு வாய்ந்தவராகவும், மிகமிகத் திறமைசாலியாகவும், வயதில் முதிர்ந்தவராகவும் காணப்படும் இன்சமாம் உல்ஹக்கின் தலைமை - பாகிஸ்தான் அணிக்குத் தற்போது தேவைப்படுகிறது. தனது தலைமையினால் பாகிஸ்தான் அணியை மீண்டும் கட்டியெழுப்பி, உலகத்தரம் வாய்ந்த அணியாக மாற்றுவாரா இன்சமாம்.

பொறுத்திருந்துதான் பார்ப்போமே...

- வீ.ஏ.கோபி.

# விளையாட்டு அரங்கம்

# ஒரே கோட்டில் இரண்டும்....??



பணமும் விழுமியமும் இருதுருவமாச்சே

சர்வதேச கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரி மல்கம் ஸ்பீட் - கிரிக்கெட் துறையின் இன்னொரு பக்கம் பற்றிப் பேசுகிறார். விளையாட்டுத் துறையின் விழுமியங்கள் பற்றியே அவர் கூறுகிறார். பணத்தை மட்டும் நோக்கிச் செல்பவர்களாக நாங்கள் இருக்கக்கூடாது. விளையாட்டின் விழுமியங்களை வளர்ப்பவர்களாகவும் இருக்கவேண்டும். இந்த இரண்டும் சமாந்தரமாகச் செல்ல வேண்டுமென்கிறார். பெரும் நிதியை உட்பாய்ச்சுபவர்கள், இலாப நோக்கம் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால், விளையாட்டுத்துறை நிர்வாகிகள் அப்படி இருக்கமுடியாது.

இலங்கை வந்திருந்த **ICC** தலைவர் இஷான் மாணியும், மல்கம் ஸ்பீடும் கலந்துகொண்ட ஒரு கூட்டத்திலேயே இவ்வாறு கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஸ்பீட்- பந்து வீச்சாளர்கள் பற்றியும் கூறுகிறார். முறையற்ற பந்து வீச்சாளர்கள் இனி இரண்டு கட்டங்களில் திருத்தப்பட சந்தர்ப்பம் வழங்கப்படும். ஒரு பந்து வீச்சாளரின் பந்து வீச்சு முறையில் தவறுகள் காணப்படின், முதல் சந்தர்ப்பமாக ஆறுவாரங்கள் திருந்திக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படும். உரிய பரிகாரங்கள் செய்து, தன்னைத் திருத்திக் கொள்ளாவிட்டால், இரண்டாவது சந்தர்ப்பம் வழங்கப்படும். அதன்பின் பந்து வீச்சிலிருந்து தடைக்குள்ளாகும்நிலை ஏற்படும் என்கிறார்.


இந்த ஒழுங்கு பந்து வீச்சாளர்களுக்குச் சிறிது ஆறுதல் கொடுக்கும். இதுவரை வேகப் பந்து வீச்சாளர்களே முறை தவறிய பந்து வீச்சுப்பற்றிக் கூடுதலாக இலக்கு வைக்கப்பட்டவர்கள். இனி சுழல் பந்து வீச்சாளர்களும் அவதானத்துக்கு உட்படுவர் என்கிறார் ஸ்பீட்.

இஷான் மாணி தன் பங்கிற்கு 2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் பற்றிக் குறிப்பிடுகிறார். மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டிகளில், பதினாறு அணிகள் பங்குகொள்ளும் என்றும், அசோசியேட் அந்தஸ்து பெற்ற அணிகளுக்குப் சந்தர்ப்பம் கொடுக்கவே இந்த ஏற்பாடு என்கிறார். மேலும் ஐக்கிய அமெரிக்காவில் சில போட்டிகள் நடப்பது பற்றி நாங்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை. இது மேற்கிந்தியக் கிரிக்கெட் சபையின் சுதந்திரம். தங்களுக்குத் தேவையான வகையில் பயன் பொருத்தம் கருதி, ஆட்டங்களை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்கிறார். ஆனாலும், ஐக்கிய அமெரிக்காவும் தெரிவுப் போட்டிகளில் கலந்துகொண்டு, தான் உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெறவேண்டும் என்று கூறியிருக்கிறார்.

கேட்பதற்கு எல்லாம் சரியாகவும், யதார்த்தமாகவும் இருக்கிறது. ஆனால், முதலில் பேசிய விழுமியங்கள் பற்றிய விடயம் நெருடுகிறது. அத்தோடு, சர்வதேச கிரிக்கெட் என்பது நிதிச் சேற்றில் மூழ்கியுள்ளதையும் எண்ணும்போது, அதுவும் நெருடலாகவே உள்ளது.

- கலைநிலா

# இவரை விட்டால் வேறு யார்?



எனக்கு எல்லோரும் சமம்

இந்திய அணியில் புகழ் வாய்ந்தவர்கள் வரிசையில் விக்கெட் காப்பாளர் சையத் கிர்மானியும் ஒருவர். 1983 ஆண்டு மூன்றாவது முறையாக இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில், மூன்றாவது தடவையும் உலகக் கிண்ணத்தை வென்று, ஹட்ரிக் சாதனை புரியாமல், மேற்கிந்திய அணியைக் கவிழ்த்த இந்திய அணியின் வக்கெட் காப்பாளராகக் கடமையாற்றியவர்தான் கிர்மானி. இதெல்லாம் முடிவடைந்து, அவர் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு வென்றபின், பாகிஸ்தானில் இவரது உறவினர்கள் இருப்பதால், பாகிஸ்தானில் சென்று குடியேற முயற்சிக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டவர். இதனை கிர்மானி மறுத்திருந்ததோடு, தன் மீது அவநம்பிக்கை கொண்ட இந்தக் கருத்து, தன்மீது சேறுபூச முயற்சிப்பதாகும் என்றும் கவலை தெரிவித்திருந்தார். இதெல்லாம் பழைய கதை.

தற்போது வரும் புதிய செய்தி வேறுவிதமானது. இதுவரை இந்திய கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழுவின் தலைவராக இருந்தவர் பிரிஜேஷ் பட்டேல். தற்பொழுது இந்தப் பதவிக்கு சையத் கிர்மானி நியமிக்கப்பட்டுள்ளார். சையத் கிர்மானி மிகுந்த கூர்மையான விக்கெட் காப்பாளர் என்ற பெயர் பெற்றவர். தற்போது ஐம்பத்து மூன்று வயதாகும் கிர்மானி - 1976 இல் சர்வதேச கிரிக்கெட் உலகிற்கு அறிமுகமானவர். ஏறத்தாழ பத்து வருடங்கள் இந்தியாவிற்காகக் கடமையாற்றிய இவர், தான் விளையாடிய எண்பத்தெட்டு டெஸ்ட் போட்டிகளில், 198 பேரை அவுட்டாக்கி இருக்கிறார்.

இவருடன்கூட, முன்னைய தெரிவுக்குழுவில் அங்கத்துவம் வகித்த கீர்த்தி அஸாத், பிரனாப் நோய், கிரண்மோரே ஆகிய முன்னைய டெஸ்ட் ஆட்டக்காரர்களும் மற்றும் சன்ஜேடக்லேயும் தொடர்ந்தும் அங்கத்தவர்களாக இருப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- ரோஜா -

1991 - டொனால்ட் கிண்ணம்
1997 - KCCC கிண்ணம்
1999 - பல்கலைக்கழக வெள்ளிவிழாக் கிண்ணம்
2003 - KCCC கிண்ணம்
2003 - மானிப்பாய் பரிஷ் கிண்ணம்

# வேண்டும் நிறைய ஊக்குவிப்பு

யாழ் மாவட்டக் கிரிக்கெட் வளர்ச்சி என்று எடுத்துக்கொண்டால், கிரிக்கெட் கழகங்களின் பங்களிப்பு என்பது மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது. பல கழகங்கள் தாமே சுற்றுப்போட்டிகளை நடத்தி, கிரிக்கெட் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வருகின்றன. இந்த வகையில், தற்போது மானிப்பாய் பரிஷ் அணியும் முதன் முதலாக ஒரு சுற்றுப்போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.


முதன் முறையே எமக்கு

மானிப்பாய்ப் பிரதேசத்தில் பல சிற்றூர்களை தன்னகத்தே கொண்ட ஒரு கழகமாக - கடந்த 15 வருடங்களாகத் தனி ஒருவரின் நெறிப்படுத்தலிலும், ஒழுங்குபடுத்தலிலும் இயங்கிவருவதே மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகமாகும். இந்தக் கழகம் - யாழ்ப்பாணத்தில் தனக்கென ஒரு இடத்தைத் தக்கவைத்திருக்கிறது என்பது, அண்மையில் நடந்துமுடிந்த பல கிரிக்கெட் போட்டிகளின் முடிவுகள்மூலம் தெரியவருகிறது.

இந்தக் கழகம் - எவ்வாறு, ஏன், எப்போது தோற்றம் பெற்றது என்ற வினாவிற்கான விடை காண முற்படுகிறபோது, அதன் நோக்கம், வளர்ச்சி, அது கடந்துவந்த பாதை, அந்தக் கழகம் எதிர்பார்ப்பது, எதிர்நோக்குவது எனப் பலவற்றை அறிந்துகொள்ளமுடிகிறது.

சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, கட்டுடை, சண்டிலிப்பாய் போன்ற இடங்களை உள்ளடக்கியதுடன், இங்குள்ள வீரர்களின் வளர்ச்சியையும், திறமைகளையும் வெளிக்கொணரும் நோக்கில் - 1988 ஆம் ஆண்டு வரசிங்கம், பவானந்தன். ஜெயராசா, மகேஸ்வரநாதன், விஜயநாதன் போன்றவர்களின் விடாமுயற்சியினாலும், பாலகிருஸ்ணன், பா.கிருபாகரன் ஆகியோரின் ஆலோசனைகளுடனும், ஒத்துழைப்புடனும் தொடங்கப்பட்டதே மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகமாகும்.

மானிப்பாயைச் சுற்றியுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களையும், இப்பாடசாலையின் பழைய மாணவர்களையும், இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏனைய மாணவர்கள், இளைஞர், யுவதிகளின் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவும், இந்தப் பிரதேச விளையாட்டுத் துறையை வளர்ப்பதற்காகவுமே இந்தக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த விளையாட்டுக் கழகம் - உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெட் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளிலும் பல திறமைகளைக் காட்டி, இந்தப் பிரதேசத்திற்கு என ஒரு தனி அந்தஸ்தைப் பெற்றுள்ளது, பெற்றும் வருகிறது என்றால் அது மிகையாகாது. இவர்களின் வளர்ச்சிக்குப் புரிந்துணர்வும், கட்டுக்கோப்பும், வலுவான நெறிப்படுத்தலும், திறமையான வழிகாட்டலுமே காரணம் என்பதோடு, சற்று உள்ளே சென்றால், இவற்றிற்குப் பலம் சேர்ப்பவராக வீரசிங்கமே உள்ளார் என்றால் அது மறுப்பதற்கில்லை.

1989 ஆம் ஆண்டு, முதல் தடவையாக வன்பந்துக் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றியபோது, அதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியுடன் சில பழைய மாணவர்களையும் உள்ளடக்கி, அனுபவமற்ற அணியாகவே களம் இறங்கினார்கள். அன்றிலிருந்து இன்றுவரை பல போட்டிகளில் பங்கு கொண்டதுடன், வெற்றிக்கேடயங்களைத் தமதாக்கிக் கொண்டதுடன், அநேகமான போட்டிகளில் இறுதியாட்டங்களில் கலந்துகொண்டதையும் குறிப்பிடலாம்.


புதிய சக்தி

இவர்களின் விளையாட்டுக் கழகம் இதற்கு திருப்புமுனையாகவும், வீரர்களுக்கு உற்சாகமாக அமைந்த விடயம்- 1991 ஆம் ஆண்டில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய சுற்றுப் போட்டியாகும். இப்போட்டியில் பல பலம் வாய்ந்த அணிகளுடன் மோதி, இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ், சொக் அணியுடன் விளையாடி, 40 ஓட்டங்களால் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து பல போட்டிகளில் முந்நிலையில் திகழ்ந்தனர். அதிலும், 1997 **KCCC** கிண்ணம், யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா போன்றபோட்டிகளில் வெற்றிக் கிண்ணத்துடன் ஊர் திரும்பினார்கள் என்றால், இது இவர்களின் விடாமுயற்சியும், தளராத பயிற்சியும், பூரண ஒத்துழைப்புமே காரணமாயின. இவற்றிற்கெல்லாம் மகுடம் வைப்பதுபோல் - இன்று யாழ்ப்பாணத்தில் முன்நிலையிலுள்ள ஒன்பது விளையாட்டுக் கழகங்களை ஒன்றினைத்து, மானிப்பாய் பரிஷ் வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியை இந்தக் கழகமே நடத்தியது.

இதன் இறுதிப்போட்டி - மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பளை யங்ஸ்ர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்றது. இதில், வெற்றிக் கிண்ணத்தை மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் தனதாக்கியது.

இந்த விளையாட்டுக் கழகத்திற்கு அனுசரணையாளர்கள் என்று இதுவரையில் எவருமில்லை. ஆனால், ஊக்குவிப்பாளர்கள் உள்ளனர். பஞ்சேந்திரம், கணநாதன், அனரன், தேவராஜா போன்றவர்களைக் குறிப்பிடலாம். இந்தக் கழகம் 15 ஆவது வருட நிறைவில் உள்ளபோதும், 2003 ஆம் ஆண்டு ஏப்ரலில் பழைய வீரர் சுரேஸ் என்பவரால், 20000 ரூபா வைப்பிட்டுக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கழகம் எதிர்பார்ப்பது- தமக்கென தனியான ஒரு மைதானம், தகுதியான உபகரணங்கள், போதிய வசதிகளுடன் வலம் வரும் அணியாக மாறவேண்டும் என்பதே.

இந்தக் கழகம் இன்று தனக்கென தனியான இடத்தை வைத்திருப்பதற்கு -

**காவலூர் விஜேந்திரன்**

திறமையான வழிகாட்டலுடன், வீரர்களின் விடாமுயற்சியும், புரிந்துணர்வும், வெற்றி தோல்வியைத் தாங்கிக்கொள்ளும் தன்மையும் - தமது கழகத்திலும், சக வீரர்களிலும் ஒவ்வொருவரும் வைத்திருக்கும் பற்றும், பரிவுமே காரணமாகும். இனிவரும் காலங்களில் தேசிய ரீதியிலும் தனக்கென ஒரு இடத்தையும், தனது பணியையும் தக்க வைத்துக்கொள்ளும் என்பது - இந்தக் கழக இரசிகர்களினதும், ஏனைய கிரிக்கெட் ஆவலர்களினதும், விளையாட்டு வீரர்களினதும் கருத்தாகும்.

# உணர்வுகள் உங்களுடன்

பாவம் பாகிஸ்தான். பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்கள் ஒரு வருடத்துக்கும் மேலாகத் தம் மண்ணில் சர்வதேசக் கிரிக்கெட் அணிகளைச் சந்திக்கும் வாய்ப்பை இழந்து நிற்கிறார்கள். கடந்த காலங்களில் பாகிஸ்தானில் நடைபெற்ற தீவிரவாதச் செயல்கள், மற்றும் குண்டுவெடிப்புகளால், அநந்ய அணிகள் அங்கு செல்வதற்குத் தயங்கின. ஆனால்,


தென்னாபிரிக்காவை வீழ்த்துவோம்


கடந்த வருடத்தில் மேற்கு நாட்டவர்களும், பாகிஸ்தானிய கிறிஸ்தவர்களும் தொடராகத் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிலைமை மோசமாகியது. இருந்தும், இம்மாதம் தென்னாபிரிக்கா - அநேகமாகப் பாகிஸ்தானுக்குச் செல்லும் என்றநிலையில், கராச்சியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பொன்று, தென்னாபிரிக்க அணியை வேறுவிதமாகச் சிந்திக்க வைத்தது. சில மணிநேரத்தில் அவர்கள் முடிவெடுத்தார்கள், சுற்றுப்பயணம் ரத்தாயிற்று.

முன்னதாகவே பாகிஸ்தான் வீரர்கள் - பங்களாதேஷுடனான ஐந்தாவது ஒருநாள் போட்டியின்போது, தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் வருவதற்கு மறுத்ததை எதிர்த்து, கறுப்புப்பட்டி அணிந்து, தம் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். ஒரு ஆர்ப்பாட்டப் பேரணியில் "தயவுசெய்து உங்கள் முடிவை மீள்பரிசீலனை செய்யுங்கள்" என்ற கெஞ்சலும், "தென்னாபிரிக்காவுடனான உறவை முறித்துக்கொள்" என்ற பதாகைகளும் காணப்பட்டன. ஜாவிட் மியன்டாட் இன்னும் சுடாகிவிட்டார். பாகிஸ்தான் சுற்றுப்போட்டியை ரத்துச்செய்ததன் மூலம்தான், பயங்கரவாதத்தை இவர்கள் ஊக்குவிக்கிறார்கள் என்று பொரிந்து தள்ளி இருக்கிறார்.

பத்திரிகைகள் மிகவும் காட்டமான கருத்துக்களை வெளியிட்டுள்ளன. ஆசிய நாடுகளில் பயங்கரவாதம் என்று தூக்கிப்பிடிப்பவர்கள், தம் நாட்டின் நிலையை உணர்ந்து கொள்வது நல்லது என்கின்றன பத்திரிகைகள்.

இத்தனையின் பின்பும், எதிர்வரும் நாட்களில் ஏதாவது நல்லது நடக்கும் என்று எதிர்பார்ப்போம் என்றிருக்கிறார் - ஐந்து வாரகாலம் பாகிஸ்தானில் தங்கியிருந்த மைக்புரொக்டர். மைக்புரொடரின் எதிர்பார்பின் விளைவோ என்னவோ - தென்னாபிரிக்கா கிரிக்கெட் சார்ந்தோர், தற்போதுள்ள அட்டவணையைக் குறுக்கி, குறுங்கால சுற்றுப்பயணம் ஒன்றுக்குச் சம்மதிப்பார்கள் போலத் தெரிகிறது. அதுவும், கராச்சி மற்றும் பெஷாவர் நகரங்களில் நடைபெறுவதாக உத்தேசித்திருந்த ஆட்டங்களை, வேறு நகரங்களுக்கு மாற்றுவதற்குப் பாகிஸ்தான் சம்மதிக்கவேண்டியும் இருக்கும் போலத் தெரிகிறது.

-ரோஜா



கிளென் மக்ரா - ஜிலெஸ்பி

## அவுங்களுக்குப் பணக் கஸ்டமாமே?

# நல்ல மனம் வாழ்க

இலங்கை கிரிக்கெட்சபை பெருத்த நிதி நெருக்கடியை எதிர்நோக்குகிறது. எனவே, இந்த நிதி நெருக்கடியிலிருந்து, கொஞ்சமாவது மீண்டெழ, உதவியாக அவுஸ்திரேலியக் கிரிக்கெட்சபை - இலங்கை வரும்போது, இரண்டு மேலதிக ஒருநாள் போட்டிகளில் விளையாடச் சம்மதித்து இருக்கிறது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில், இலங்கைக்குவர உத்தேசித்துள்ள அவுஸ்திரேலிய அணி, மூன்று ஒருநாள் போட்டிகளிலும், மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவே முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய நிலையில் ஒன்பது இலட்சம் அமெரிக்க டொலர்கள் நட்டத்தினை, இலங்கை கிரிக்கெட்சபை எதிர்நோக்குவதாகவும், மேலதிக இரண்டு ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அவுஸ்திரேலியா விளையாடினால், அதன்மூலம் ஏறத்தாழ எட்டு லட்சம் டொலர்கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இதற்குச் சாதகமாகவே அவுஸ திரேலிய கிரிக்கெட்சபை பதிலளித்துள்ளது.

எனவே, இதற்குப் பிரதியுபகாரமாக இலங்கையும் ஏதாவது செய்யவேண்டுமல்லவா? அதற்கு இலங்கை சம்மதித்திருக்கிறது. அதாவது அடுத்த வருடம் ஜுன், ஜுலையில் அவுஸ்திரேலியாவிற்கு இலங்கை அணி செல்லும்போது, டார்வின், கெயின்ஸ் ஆகிய புதிய டெஸ்ட் மைதானங்களில் ஆட்டங்களில் ஈடுபட இலங்கை கிரிக்கெட் சபை சம்மதித்துள்ளது. இதற்கு முன்னதாக அவுஸ்திரேலியா 1999 இல் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் 1:0 என்று டெஸ்ட் தொடரை இலங்கை வென்றிருந்தது.

**பெப்ரவரி 20 - முதலாவது ஒருநாள் ஆட்டம்- தம்புள்ள (இரவு-பகல்).**
**பெப்ரவரி 22 - இரண்டாவது ஒருநாள் ஆட்டம் - தம்புள்ள (இரவு-பகல்).**
**பெப்ரவரி 25 - மூன்றாவது ஒரு நாள் ஆட்டம்- கொழும்பு (இரவு-பகல்).**
**பெப்ரவரி 27 - நான்காவது ஒரு நாள் ஆட்டம் - கொழும்பு (இரவு-பகல்).**
**பெப்ரவரி 29 - ஐந்தாவது ஒரு நாள் ஆட்டம் - கொழும்பு (இரவு -பகல்).**
**மார்ச் 8-12 முதலாவது டெஸ்ட் - காலி**
**மார்ச் 16 - 20 இரண்டாவது டெஸ்ட் -கணடி**
**மார்ச் 24 - 28 மூன்றாவது டெஸ்ட் கொழும்பு**

- மிதிலா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### சமாதான விரோத - பேரினவாத சக்திகளின் பட்டியலில் இணையும் அமெரிக்கா

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா மேலும் நீடித்துள்ளது.

சர்வதேச பயங்கரவாதிகள் - பங்கரவாத அமைப்புக்கள்-குறித்து, அமெரிக்கா ஆண்டுதோறும் வெளியிட்டு வரும் பட்டியலில் விடுதலைப் புலிகளையும் கடந்த சில ஆண்டுகளாக இணைத்து வருவது தெரிந்தவிடயமே.

அமெரிக்க ஜனநயாகம் என்பது - எந்தக் காலத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களையும், அவர்கள் உரிமைகளையும் வென்றெடுக்க மேற்கொண்ட நியாயபூர்வமான - எந்தவழியிலும் தவிர்க்க முடியாத போராட்டங்கள் அனைத்தையும் பயங்கரவாதிகள் என்றும், பயங்கரவாத நடவடிக்கைகள் எனவும் பட்டியலிடுவதை, ஒரு அரசியல் கலாசாரமாகவே கொண்டு இயங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகில் நிறவெறி பயங்கரவாதத்தை மிக மோசமாகக் கடைப்பிடித்து அதனைக் கறுப்பின மக்களுக்கு எதிரான வெள்ளையினக் கலாசாரமாக அடையாளப்படுத்துபவர்களில் தீவிரமானவர்களும் அமெரிக்கர்கள்தான்.

அமெரிக்காவில் அரசியல், இராணுவ அபிலாஷைகளுடன் ஒத்துவராத மற்றும் அதற்கு எதிரான அனைத்துச் சக்திகளும், அமெரிக்க ஜனநாயகக் கோட்பாட்டின்படி பயங்கரவாதிகள் என்றே அர்த்தப்படுத்தப்பட்டுள்ளமையை வரலாறு சுட்டி நிற்கின்றது.

அமெரிக்கா தனது விருப்பத்திற்கு அமைவாக நடக்க அந்த அமைப்புக்களோ, நாடுகளோ ஓரளவுக்கேனும் இணக்கம் தெரிவித்தும், சமிக்ஞைகளை வெளிப்படுத்தும் வரைக்கும அந்தந்த நாடுகளின் மற்றும் அமைப்புக்களின் மீதான தடையை நீக்குவது கிடையாது.

ஒரு வழியில் பார்த்தால், இது ஒரு வகையிலான அரசியல் பயங்கரவாதமேயாகும். ஆனால், அமெரிக்காவின் மேலாதிக்கச் சிந்தனையும், வல்லாதிக்க அதிகாரமும் இதனைப் பயங்கரவாதமாக ஏற்றுக்கொண்டதே கிடையாது. மாறாக, இதனைச் சர்வதேச சமூகத்தின் மீதான அக்கறையுடன் கூடிய வெறுப்புணர்வுமிக்க நடவடிக்கையாகவே, பிரச்சாரங்கள் மூலம் பிரகடனமும் செய்து கொள்ளும்.

அமெரிக்காவில் இந்த அநாகரிகமான அரசியல்தனத்தை அகில உலகம் அவ்வப்போது நடைபெற்ற வரலாற்றுச் சம்பவங்களின் மூலமாக அறிந்துகொண்டே உள்ளது. ஆனாலும், அமெரிக்காவின் இந்த மதிப்பீட்டை சர்வதேச சமூகம் முழுவதுமாக அங்கிகரிப்பதில்லை, மதிப்பதுமில்லை. மாறாக, அமெரிக்கப் பயங்கரவாதம் எந்தவகையிலும் தம்மை பாதிக்காத வகையில் அவர்கள் ஒரு பார்வையாளராகவே ஒதுக்கி விடுவாகள்.

அமெரிக்காவின் இராணுவப் பொருளாதாரவலு - சர்வதேச சமூகம் மீது அழுத்தமாக பதித்துள்ள செல்வாக்கின் வெளிப்பாடான ஒருவகையிலான அச்சுறுத்தலே இதற்குக் காரணமாகும்.

இந்த அச்சுறுத்தல்கூட ஒருவகையிலான - மேலாதிக்க வெறியுடன் கூடிய பயங்கரவாத நடவடிக்கையேயாகும்.

ஆனால், இதனை உலக ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே அமெரிக்கா பிரசாரம் செய்கிறது.

அண்மையில் - ஆப்கானிஸ்தான், ஈராக்கில் முன்னர் வியட்னாமில், கொரியாவில் நடந்ததெல்லாம் அமெரிக்கப் பயங்கரவாத ஜனநாயகக் கோட்பாட்டின் அராஜகச் செயற்பாடுகள் என்பதைக் காலங்கடந்தே உலகம் புரிந்து கொண்டது.

எனினும் அமெரிக்காவை பயங்கரவாத நாடு என்று சொல்ல எவரும் வெளிப்படையாக பெருமளவுக்குத் துணிந்ததும் இல்லை. அதேசமயம் அமெரிக்க ஜனநாயகத்தை உளமாற ஆதரித்ததும் இல்லை.

ஆனாலும், ஈராக் மீதான அமெரிக்காவின் நடவடிக்கையை அடுத்து சர்வதேச அளவில் பரவலாக அமெரிக்காவுக்கும், அமெரிக்க ஜனாதிபதிக்கும் எதிரான 'கோஷங்கள' உலகெங்கும் மட்டுமல்ல, அமெரிக்காவில்கூட எழ ஆரம்பித்துள்ளன.

அமெரிக்கா பயங்கரவாதம் குறித்து பகிரங்கமாகப் பேசப்படும் நிலை உருவாகியுள்ளதுடன், ஜோர்ஜ் புஷ்ஷை 'பயங்கரவாதி' என்று வெளிப்படையாகவே கண்டனம் செய்து, அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் நிகழ்வுகளும் நடந்தேறி வருகின்றன.


இந்தப் பரிகாசத்துக்கும், பரிதாபத்துக்கும் உரிய நிலையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனத் தொடர்ந்தும் பட்டியலிடுவதன் மூலம் - இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கும் குந்தகம் விளைவிக்கலாமேயன்றி, வேறெதையும் சாதிக்கப்போவது கிடையாது.

உலக சமூகம் விடுதலைப் புலிகளின் நியாயமான போராட்டத்தைப் புரிந்துகொண்டு, சமாதான நகர்வுகளில் அவர்களுக்கு ஆதரவாக நீதியின் அடிப்படையில் செயற்படத் தொடங்கும் வேளையில், அமெரிக்காவின் தடை நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பு - விடுதலைப் புலிகளுக்கு எதிரான சமாதான எதிர்ப்புச் சக்திகள் மற்றும் தமிழின விரோத பேரினவாத சக்திகளின் பாராட்டையும் பெறலாம். அவ்வளவும்தான்.

சமாதானத்தை - நியாமான தீர்வை எதிர்பார்க்கும் சகல மக்களும், பொறுப்புள்ள உலக சமூகமும் - அமெரிக்காவை சமாதான எதிர்ப்பு மற்றும் பேரினவாத சக்திகளின் பட்டியலில் நிரந்தரமாக இணைத்துக்கொள்ளவே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இந்த அறிவிப்பு வழிவகுக்கும் என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமுமாகும்.

## நாடும் நடப்பும்




# 20 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு இம்மாத இறுதிக்குள் வேலைவாய்ப்பு!

## வெளிவாரித் தொழில் நிறுவனங்கள் அரசுக்கு உறுதி

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் 20 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்புப்பெற வழிசமைப்பதாக, வெளிவாரித் தொழில் நிறுவனங்கள் அரசுக்கு உறுதியளித்துள்ளன.

பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்தவர்கள் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே, தொழில் நிறுவனங்கள் மேற்படி உறுதிமொழியை அரசுக்கு வழங்கியுள்ளன.

வேலைவாய்ப்புக்கான நேர்முகத் தேர்வில் குறைந்தது இரண்டிலாவது மேற்படி இளைஞர்கள் பங்குபற்றவும், அவற்றில் சித்தியடைபவர்களுக்கு வேலைவாய்ப்பினை அவசியம் வழங்கவும், இந்த வெளிவாரித் தொழில் நிறுவனங்கள் இணங்கியுள்ளன.

வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்கள் - இனவாதிகளின் பேச்சுக்களால் கவரப்பட்டு, மீண்டும் நாட்டில் இனப்பிரச்சினை ஏற்படுவதற்கு காரணமாக இருந்து விடுவார்கள் என, அரசு கருதுவதாலேயே - பட்டதாரிகள் மற்றும் க.பொ.த உயர்தரம் பயின்ற மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதே நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஒரேவழியென ஆளுங்கட்சி கேட்டுக்கொண்டதற்கிணங்கவே- இம்மாத இறுதிக்குள் 20 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க இந்த நிறுவனங்கள் உறுதியளித்ததாக, வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் நிஹால் அபயசேகர தெரிவித்தார்.

# வட-கிழக்கு வீதிப் புனரமைப்புக்கு 7500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

யாழ்.கண்டி ஏ-9 வீதி உட்பட வடக்கு - கிழக்கிலுள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கு - 7500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி, அம்பாறை வீதிப் புனரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 5000 மில்லியன் ரூபாவையும், திறைசேரி 2500 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கீடு செய்துள்ளன.

இதேவேளை, கடந்த 50 வருட காலமாக எந்த விதமான அபிவிருத்திப் பணிகளையும் கண்டிராத தென்மாகாணத்துக்கு இம்முறை 49 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

# பேச்சு முடிவுகளைப் பொறுத்தே இலங்கைக்கு புதிய உதவிகள்!

## ஆசிய, உலக வங்கிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள் போதுமானவையாக இல்லை. பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் நல்லனவாகவும் இருக்கவேண்டும். அப்போது தான் இலங்கைக்கான மேலும் புதிய உதவிகள் பற்றி ஆலோசிக்கலாம் என்று ஆசிய, உலக, ஜப்பானிய வங்கிகள் தெரிவித்தன.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்து, உறுதியான தீர்வு எட்டப்படவேண்டும் என, இந்த நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன.

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின்

# திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கம் அவசர நடவடிக்கை!

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கு - அமைச்சர் லொக்குபண்டாரவினால் முன்வைக்கப்பட்ட திருத்தச் சட்டமூலத்தை - அவசர சட்டமூலமாகக் கருதி அங்கீகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதென்று, அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் தற்போதைய சட்டதிட்டங்களின்படி- மூன்று ஆணையாளர்களில் இருவர் இல்லாதபட்சத்தில் குழு அதிகாரங்கள் தனியொருவரின் கைக்குச் சென்றடைகின்றது. ஆகவே பணிகளை முன்னெடுக்கமுடியாத நிலை காணப்படுகிறது.

ஆகவேதான், ஒரு ஆணையாளர் வெற்றிடம் ஏற்பட்டால் அதனை நிரப்புவதற்காக - ஆணையாளர்களின் எண்ணிக்கையை மூன்றிலிருந்து ஐந்தாக அதிகரிக்கும் வகையில்- திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, பணிப்பாளர் நாயகமாக ஒருவரைத் தெரிவுசெய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. ஆணையாளர்களின் இணக்கத்தைப் பெற்றே அவர் பணிப்பாளர் நாயகத்தை நியமிக்கவேண்டும்.

புதிய திருத்தத்தின்படி அரசியலமைப்பின் அங்கீகாரத்துடனேயே ஜனாதிபதி பணிப்பாளர் நாயகத்தை நியமிக்கவேண்டும்.

இதன்காரணமாகவே ஜனாதிபதி இச்சட்டத்திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# அரசிற்கு எதிராக எதிர்க் கட்சிகள் மறியல்போராட்டம் நடத்த திட்டம்!

அரச திணைக்கள ஊழியர்களை ஒன்று திரட்டி அரசிற்கு எதிராக நாளை மறுதினம் எதிர்க்கட்சி மறியற்போராட்டம் ஒன்றினை நடாத்தவுள்ளது.

அரச திணைக்களங்களை தனியார் மயப்படுத்தல், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் வரவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் அரச திணைக்கள ஊழியர்களின் சம்பள உயர்வு இடம்பெறவேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தவுள்ளனர்.

இதேவேளை, நேற்றைய தினம் எம்பிலிப்பிட்டிய நகரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மேற்படி போராட்டத்திற்கு ஆதரவான முன்னோடி மறியற் போராட்டமொன்றினை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசுக்கு எதிராக திட்டமிடப்படும்

# பாரிய எதிர்ப்புப் போராட்டங்கள்

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

என்றும் இல்லாதவாறு நாட்டில் பிரச்சினைகள் அதிகரித்துவிட்டன. அரசாங்கத்துக்கு நிர்வாகச் சிக்கலை கொடுக்கும் அளவிற்கு அனைத்துப் பிரச்சினைகளுமே தீவிரமடைந்துள்ளன. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்ற நிலையில், தொழிலாளர் வர்க்கத்தினர் தொடர்ந்தும் சம்பள உயர்வு கோரிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு உடனடியாக அரசாங்கம் சம்பள உயர்வைத் தரமுடியாது என்பது தெரியும். எனினும், எதிர்வரும் நவம்பர் மாதம் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவு திட்டத்தின்போது, தமக்கு உரிய சம்பள உயர்வை உறுதிப்படுத்திக்கொள்ளவே தொழிலாளர் போராட்டங்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சம்பள உயர்வுகோரிப் போராட்டங்கள் ஒருபுறமிருக்க, அரசாங்கத்திற்கு தலைவலியைக் கொடுக்கக் கூடிய வகையிலும், கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இதற்குப் புகையிரத சேவை ஊழியர்களின் நடத்தையைக் குறிப்பிடலாம். நேற்று முன்தினம் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி, 48 மணித்தியாலம் வேலைநிறுத்தத்தை முடித்துக்கொண்ட அவர்கள், அது முடிவடைந்த அடுத்த மணித்தியாலத்திக்குள்ளேயே தமது போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துவிட்டனர். இது அரசாங்கத்திற்கு தீவிர பிரச்சினையாக இருந்தபோதிலும், புகையிரத சேவை ஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமானதாகத் தெரிகிறது. உரிய பாதுகாப்புக் கடமைகள் செய்யப்படாமையால், வேலைநிறுத்தம் செய்யப்பட்ட 48 மணித்தியாலங்களுக்குள், 98 புகையிரதங்களை மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நிர்வாகச் சிக்கலுக்குள் முகங்கொடுக்க வேண்டியநிலைக்கு உள்ளாகியுள்ளது உண்மை. அண்மைக் காலமாக சுகாதார சேவையினர், மருத்துவர்கள், கனிஷ்டநிலை ஊழியர்கள் என, தொடர்ந்துவந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் தற்சமயம் புகையிரத சேவையினர் வரையில் நீடித்துள்ளது. அரசாங்கத்திடம் நிதிவளம் இல்லை. வெளிநாடுகளே இதற்கு உதவவேணடும் என்ற நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில், மக்கள் விடுதலை முன்னணி போன்ற அரசியற் கட்சிகளின் முன்னிலைப் போராட்டங்களில் தர்க்க நியாயம் இருப்பதாகத் தெரியாவிட்டாலும், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசாங்கத்திற்கு இது மேலும் ஒருபடி உத்வேகத்தைக் கொடுத்துள்ளது எனலாம். அதாவது, இலங்கைக்கு உதவி வழங்குவதாக ரோக்கியோவில் உறுதியளித்த நாடுகள் யாவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக ஜப்பான், மேற்குலக நாடுகள் இடையில் தடைப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பித்தால் மாத்திரமே நிதியுதவி வழங்கப்படும் எனக் கூறியுள்ளன. ஆனால், அதற்கு ஒருபடி மேலே சென்று, இவர்களுக்கு நிரந்தரமாக உதவி வரும் IMF எனப்படும் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி மற்றும் சர்வதேச ஜப்பான் வங்கி என்பன பேச்சுவார்த்தை ஆரம்பித்தால் மாத்திரம் போதாது. பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படவேண்டும். அரசாங்கம் ஒரேயடியாக, முழுமையாக இல்லாவிட்டாலும், பேச்சுவார்ததையின் மூலம் - அது தொடர்பில் இணக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை, தற்போது பதவியில் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை மாத்திரமல்ல, மீண்டும் ஆட்சிக்கு வரத்துடிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியையும் பாதிக்கவே செய்யும். மக்கள் விடுதலை முன்னணி புதுப்புது பொருளாதாரத் திட்டங்கள் குறித்து அறிக்கைகளை வெளிப்படுத்துகின்ற போதும், அவர்களும் உலக நாடுகளின் தீவிர கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டேயாக வேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் தற்சமயம் இந்தியாவை முழுமையாக நம்பிக்கொண்டிருக்கின்றன. தாம் ஆட்சியமைத்தால், இந்தியா முழுமையாக பொருளாதார உதவிகளை வழங்கும் என, அந்தக் கட்சிகள் நினைக்கின்றன.



எனவே, மேற்குலக நாடுகளை தாம் நம்பத்தேவையில்லை என அவை எண்ணுகின்றன. ஆயினும், இன்றைய உலமயத்தின்கீழ், அந்தக் கட்சிகள் இந்தியாவை மாத்திரம் நம்பியிருப்பது எதுவித நன்மைகளையும் ஏற்படுத்தப் போவதில்லை என்பது உறுதி. இந்தியா எப்போதும் ஒரு விடயத்தில் கவனமாக இருந்து வருகின்றது. இலங்கைத் தமிழர் களுக்கு வழங்கப்படவிருக்கும் தீர்வு - தமது நாட்டின் மாநிலங்களைப் பாதித்துவிடக்கூடாது என்பதே இதற்கான காரணமாகும் எனக் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. இது தமிழீழ விடுதலைப் புலிகளை பொறுத்தவரையில், சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துவிட்டு, வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் திட்டம் ஒன்றை எண்ணத்தில் கொண்டிருந்தது. அதன்மூலம், நாட்டின் தற்போதைய ஊழியர்கள் தொடர்பான பிரச்சினைகளை முடித்துவிட்டு, அடுத்துவரும் தேர்தலுக்குத் தயாராவதே அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தது. இதனையே எதிர்க் கட்சிகள் நினைத்துக்கொண்டிருந்தன. எனினும், பேச்சுவாத்தை ஆரம்பித்து, நிதி கிடைக்காவிட்டால், அரசுக்கு நமது நிலைப்பாட்டை மாற்றி, இனப்பிரச்சினைத் தீர்வை தமது அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் இழுத்தடிக்கக்கூடாதென, தமிழீழ விடுதலைப் புலிகள் நினைக்கின்றனர்.

எனவே, அவர்கள் தமது தற்போதைய இலக்கினை, இடைக்கால அமைப்பை நிறுவிக்கொள்வதற்கு சர்வதேச நாடுகளின் நிதியுதவிகளைக் கட்டுப்படுத்தும் சக்தியையும் இப்போது தமது வசப்படுத்தியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளைக் காரணங்காட்டி, அரசாங் கத்தினால், எந்தவொரு நிதியையும் பெற்றுக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதால், அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்குச் சாதகமான தீர்வை தரும்போது மாத்திரமே, அரசாங்கத்திற்கு வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்படும். இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கப்போகும் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக திட்டவரைபை - இந்தியாவின் மாநிலங்களைவிட, இலங்கையின் வடக்கு - கிழக்குக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அது இந்திய மாநிலங்களில் பிரச்சினைகளைக் கொண்டுவரக்கூடும். அந்த மாநில மக்களும், தமக்குக் கூடிய அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கும் வாய்ப்பிருக்கிறது (குறிப்பாக தமிழ் நாடு).

எனவே இந்திய மாநிலங்களின் அதிகாரங்களை ஒத்த அல்லது அதற்குச் சற்றுக் கூடுதலான அதிகாரங்களை இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழங்குவதற்கு இந்தியா ஆட்சேபணை தெரிவிக்கப் போவதில்லை. ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தீர்வுத் திட்டவரைபு - அவர்களுக்கு அதிகளவு அதிகாரங்களைச் சர்வதேச அனுசரணை பெற்றுக்கொடுத்துவிடுமோ என்ற சந்தேகம் இந்திய நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. எனவேதான் இலங்கை இனப்பிரச்சினையின் தற்போதைய நகர்வில் மிகக் கவனமான நிலைப்பாட்டை இந்தியா கடைப்பிடித்து வருகிறது. அவ்வப்போது தமது நினைப்பு, இலங்கையில், முக்கியமாக அரசாங் கத்திலும் இருக்கவேண்டும் என்பதை அது கோடிட்டுக் காட்டி வருகின்றது. நிலைமை இவ்வாறிருக்க, அரசாங்கத்திற்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, தமது நிலைப்பாட்டில் சற்று இறுக்கமான போக்கைத் தற்சமயம் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளார்.

அதேநேரம், அண்மைக்காலத்தில் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக - இலங்கை அரசியலில், ஆட்சி அதிகார சக்தியைக் கொண்டிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அவர் ஒருபடி கீழேயிறக்கி, மக்கள் விடுதலை முன்னணி இணைந்தால், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றமுடியும் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது என்பதை எண்ணி, அவர்கவலை கொள்கிறார். அவரின் அண்மை நிலைமைப்பாடு காரணமாக, கட்சியிலுள்ள பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட, கேள்வி கேட்குமளவிற்கு நிலைமை தீவிரமடைந்துள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி சில தீமானங்களைக்கூட எடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார். அண்மையில் இடம் பெற்ற தேசாபிமானிகள் என்ற அமைப்பின் - கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிய பேரணியில் பங்குகொள்ள ஜனாதிபதி முதலில், தமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கவில்லை. ஆனால், தேசாபிமானிகளின் பேரணி ஆரம்பிக்கும் தறுவாயில் அதில் பங்குகொள்ள வேண்டாமென, ஜனாதிபதி தமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டார்.

ஆனால், கட்சியின் மூத்த உறுப்பினரான முன்னாள் பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க முன்னின்று இந்தப் பேரணியில் பங்கேற்றமை, ஜனாதிபதிக்கு சங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது. இதனைத் தொடர்ந்து கட்சியின் முக்கிய உறுப்பினர்களான - மங்கள சமரவீர, சரத் அமுனுகம, தினேஷ் குணவர்த்தன மற்றும் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் அர்ச்சுன ரணதுங்க போன்றோரும் இதில் பங்கேற்றமை, ஜனாதிபதிக்கு மேலும் சங்கடத்தை ஏற்படுத்திவிட்டது. அதிலும் ஜனாதிபதியின் அறிவுறுத்தலையும் மீறி, அவரின் சகோதரனான அனுரா பண்டார நாயக்க, நிட்டம்புவவில் பேரணியின் மத்தியில் உரையாற்றியமை, கட்சிக்குள் மேலும் மேலும் தீவிர முரண்பாட்டை உண்டு பண்ணியுள்ளது. நிட்டம்புவப் பிரதேசம் காலங்காலமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வலுவான கோட்டையாக இருந்து வருகிறது.

எனவே, அங்கு வேறொரு கட்சியைப் பிரசித்தப்படுத்துவது ஏற்றுக் கொள்ளமுடியாது என்பதே ஜனாதிபதியின் கருத்தாகும். ஆனால், ஜனாதிபதியின் கட்டளையையும் மீறி, அனுரா பண்டாரநாயக்க, நிட்டம்புவையில் வைத்து தேச அபிமானிகள் கூட்டத்தில் உரையாற்றியமை, கட்சி எவ்வாறு போனாலும், அடுத்து ஆட்சியை அமைக்கவேண்டும் என்பதையே அவரின் நடவடிக்கை பிரதிபலித்து நிற்கிறது. 12 புகையிரத இயந்திரங்கள் வேண்டுமென்றே பழுதடையச் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்ந்தும் புகையிரத சேவையை இயங்கமுடியாத நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இதனைச் செய்திருப்பார்களோ என எண்ணத் தோன்றுகின்ற போது, அது அரசாங்கத்துக்குப் பாதகமான செயலாகையால், அவர்கள் செய்திருக்க வாய்ப்பில்லை.

இது இவ்வாறிருக்க, ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப, ஜனாதிபதி திட்டங்களை வகுத்துள்ளார். இதில் ஒரு திட்டந்தான் எதிர்வரும் நவம்பருக்குள் அரசாங்கத்துக்கு எதிராகப் பாரிய எதிர்ப்புப் பேரணிகளை நடத்துவது என்பதாகும். மக்கள் விடுதலை முன்னணியை இந்தப் பேரணிக்கு அழைக்கின்ற போதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியே இதில் முதன்மைபெற வேண்டுமென, அவர் உத்தர விட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆதரவான போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். இதற்கொரு உதாரணமாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் தேச அபிமானிகள் கண்டியிலிருந்து, கொழும்புக்குப் பேரணியை நடத்தியவேளையில், அரசாங்கத்தை பதவி கவிழ்க்க, தெய்வ ஆசிவேண்டி மகிந்த ராஜபக்ஷ திஸ்ஸமகரகமையிலி ருந்து கதிர் காமத்துக்குப் பாதயாத்திரை சென்றமையாகும். இறுதியாக, பொதுஜன ஐக்கிய முன்னணி, பிரதமருக்கு எதிராக, நம்பிக்கை யில்லா பிரேரணையைக் கொண்டுவரத் திட்டம் வகுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ஈராக்குக்கு எதிரான அமெரிக்க நிலைப்பாட்டை ஆதரித்துப் பேசினார் என்ற குற்றச்சாட்டே இதற்கு முதன்மைக் காரணமாகும்.

---

# கலைமகள் திருவடிவை வழிபட்டால் காரியங்கள் யாவும் வெற்றியாகும்!

**நாளை விஜயதசமிநாள். அதனை முன்னிட்டு இப்பிரசுரம் வெளியாகின்றது.**

*பூவை மறந்தனன் தெண் டாமரையில்*
*புகல் தரு சங்கப் புலவோர் சொற்*
*பாவை மறந்தனள் தேசு பாடிப்*
*பயனை மறந்தனள் பதுமத் தோள்*
*நாவை மறந்தனள் பொதிய மலைத் தலை*
*நண்ணிய புண்ணிய முனிவ னெனுங்*
*கோவை பிறந்தனள் சேவையர் காவலனார்*
*திருநாவில் குடி கொண்டாள்.*

சரஸ்வதிதேவிக்கு, மிகப் பிரியமான இடம் கவிஞர்களின் வாக்குத்தான். அவள் தான் வாழும் பூவையும், சங்கப் புலவர்கள் பாவையும், பிரம்மதேவர் நாவையும், பொதிகை முனிவர் வாழும் கோவையும், மறந்து கவிஞர் நாவிலே குடிகொள்கிறாளாம்.

பிரம்மாவின் நாவில் கலைமகள் இருக்கிறாள் என்றால், அவள் இஷ்டப்படியேதான் பிரம்மா பேசுகிறார். பிரம்மாவின் நாக்கையே ஆட்டி வைக்கும் அத்தேவியானவள் பிரமம் சிருஷ்டியின் மீது கலை ஆதிக்கம் செலுத்துகிறாள். பிரம்மாவின் படைப்புகள் எல்லாமே கலைப் படைப்புகள்.

"நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நடப வரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக்களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே"

என்று கவிமணி பாடியிருக்கிறார்.

நான்முகன் தேவியான கலைமகள், பூவுலகுக்கு வந்தாள். முதன்முதலில் கலை அன்னையின் கண்களில் வானை நோக்கி வாழ்கின்ற நிலத்திலே, பயிரை வளர்த்து உயிரைக் காக்கும் உழைப்பாளிகள் மேழிக் கரங்கள் தென்பட்டன. பின்பு செஞ்சொற் கவிவாணர்கள் இன்னிசையுடன் பாடுவது புலனாயிற்று. அதன்பின்பு கலைஞானம் மலைபோல ஒளிரும் அறிவாளிகளின் நெஞ்சத் துடிப்புத் தென்பட்டது. உடனே "நாம் நடமாடத் தகுந்த இடங்கள் இவைகளே" என்று அறிந்துகொண்ட கலையன்னை. அவ்வாறே, அங்கு கோயில் கொண்டு வண்ணமயில் போல கலைநடனம் புரிய ஆரம்பித்துவிட்டாள்.

**வெண்தாமரையில் வீற்றிருப்பவள்**

"பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை" என்பர். தெய்வங்களுக்கு உறைவிடமாகவும், தூய்மைக்கு உதாரணமாகவும் விளங்குவது தாமரைப் பூ ஒன்றே "மலரின் மேவு திருவாக" லஷ்மியை உருவகம் செய்த கவிஞனே கலைமகள் வெள்ளைத் தாமரைக்குள்ள முக்கியத்துவத்தை உணர்ந்தே கலாதேவி அதைத் தன் இருப்பிடமாகக் கொண்டாள் போலிருக்கிறது.

**சங்கம் வளர்த்த சரஸ்வதி**

தமிழ்நாட்டில் முதல், இடை, கடை தமிழ்ச் சங்கங்கள் தமிழை வளர்த்தன என்று எல்லோருக்கும் தெரியும். மதுரையில் இருந்த மூன்றாவது தமிழ்ச் சங்கத்தில்தான் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. முதலில் இருந்த சங்கம் சரஸ்வதிதேவியின் அம்சமே என்பது பலருக்குத் தெரிந்திராது.

பிரம்மா கங்கையாடியும் காவிரி ஆடியும் திரும்புகிறார். என்னை விட்டுவிட்டு இப்படி போய் வரலாமா? என்று சரஸ்வதி கோபிக்கிறாள். குற்றம் உன்மேல் இருக்க என்னை கோபிக்கிறாயே என்று பிரம்மா சபிக்கத் தொடங்குகிறார்.

பூமியில் 48 ஜன்மம் எடுக்க என்று சாபம் கொடுக்கிறார். என்னவென்றாலும் கணவன் மனைவி சண்டைதானே. மனைவிக்கு சாபம் கொடுத்துவிட்டோமே என்று பிரம்மாவுக்கு கவலை ஏற்படுகிறது. தன் சபதத்தை மாற்றி ஒரே சமயத்தில் 48 பிறவிகளையும் எடுக்கும்படி தன் சபதத்தை மாற்றுகிறார். சாபம் என்னதென்று தெரிந்ததும் சரஸ்வதிக்கு கோபம் போய் குதூகலம் ஏற்பட்டு விடுகிறது. அப்படியே மதுரை மாநகரில் இறங்கி 48 புலவர்களாக பிறக்கின்றாள். இவர்களைக் கொண்டது தான் முதல்தமிழ் சங்கம். இதற்குத் தலைவராக இருந்தவர் சிவபெருமானே.

தமிழின் இனிமையில் உள்ளத்தைப் பறிகொடுத்தவள் பல தமிழ்ப் புலவர்களாகத் தோன்றி இன்பத்தமிழ் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்க வேண்டும். இது சாபமா? தமிழ் உலகுக்கு பிரம்மன் கொடுத்த வரப்பிரசாதம்.

**கவிமாமணி**
**காரை எம்.பி. அருளானந்தம்**

சரஸ்வதி என்றதும் அவள் வீணை தாங்கி இருக்கும் உருவமே நம்கண்முன் வரும். தூய்மையுடன் விளங்கும் வாகீஸ்வரியை அசுத்தமோ அலட்சியமோ செய்யக்கூடாது. அவள் அருள் இல்லையேல் வாழ்க்கையே சூன்யமாக்கி விடுகிறது.

'வாக்' என்பது மூலத்தில் படைத்தல் எனப்பொருள்படும். சரஸ்வதியை இந்திரனுடைய மறுவுயிர் என்று சொல்வதுண்டு. சிருஷ்டியே சக்தி. இதனால்தான் இவள் பிரம்மாவின் சக்தி எனப்படுகிறாள்.

நாமும் நலம் நிறைந்த "வாக்கை" அருளி. வசந்தமான அறிவுபொலியும் வாழ்வை அருளும் சரஸ்வதியை இந்த நவராத்திரி காலங்களில் வழிபட்டு வாழ்வாங்கு வாழ்வோமாக.



பிரேசிலில் கால்கள் ஒட்டிப் பிறந்த குழந்தைகள் நேற்று முன்தினம் வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# ஈராக் தொடர்பான தனது நிலைப்பாட்டை அமெரிக்க அரசாங்கம் மாற்றவேண்டும்!

## ஐ.நா.பாதுகாப்புச்சபை அதிகாரிகள் கோரிக்கை

(வோஷிங்ரன்)

ஈராக் தொடர்பான அமெரிக்காவின் தற்போதைய கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்படாவிடின், தொடர்ந்தும் எவ்வித பங்கையும் தாம் வகிக்கப் போவதில்லையென ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் அண்மையில் தெரிவித்த கருத்துக்களின் எதிரொலியாகவே இக்கருத்து அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை கூட்டப்படவுள்ள பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தமது கருத்துக்கள் தொடர்பான பிரத்தியேக ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

இதனிடையே, கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்புச்சபை பிரதிநிதிகள் நடத்திய விருந்துபசாரம் ஒன்றில் பங்குபற்றிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான், தனது ஊழியர்கள் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் ஈராக்கில் ஆபத்துக்குட்படத் தயாரில்லை என தெரிவித்தார்.

இந்தக்கருத்தை அறிந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல், ஈராக்கில் ஐக்கிய நாடுகளின் பலமான பங்கினைத்தான் எதிர்பார்ப்பதாக தொலைபேசி உரையாடல் மூலம் ஐக்கிய நாடுகளின் கோபி அனானிடம் தெரிவித்திருந்தார்.

## பக்தாத்தில் அமெரிக்கர் ஒருவர் உயிரிழப்பு!

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் போர்வீரர் ஒருவர் கிரனைட் மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களில் கொல்லப்பட்டதுடன் இன்னொரு படைவீரர் காயமடைந்ததாகவும் அமெரிக்க இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த மே மாதம் ஆரம்பித்த ஈராக் மீதான அமெரிக்காவின் போரில் இதுவரை 85 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

# போதைப்பொருள் பாவனை ஈராக்கில் திடீர் அதிகரிப்பு!

(பக்தாத்)

ஈராக்கில் போதைப்பொருள் பாவனை திடீரென அதிகரித்துள்ளதுடன் அது தொடர்பான குற்றச் செயல்களும் அதிகரித்து வருகின்றன.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்க முன்னர், ஈராக் சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பல்லாயிரம் கைதிகளும் சட்டம் ஒழுங்குகளை மீறி நடந்துவருகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்துவதில் ஈராக்கிய பொலிஸார் பலத்த சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதைவஸ்து பாவனையில் ஈடுபடும் குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டாலும், போதை தெளிந்த பின் அவர்கள் செய்த குற்றங்களை புரியவைக்க முடியாத நிலை காணப்படுவதாக ஈராக்கிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஈரான் எல்லைப் பகுதியின் ஊடாகவே இந்தப் போதைவஸ்துகள் நாட்டுக்குள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அல்-கொய்டா போராளிகளின் மறைவிடங்கள் மீது பாகிஸ்தான் படையினர் சுற்றிவளைத்து தாக்குதல்!

## எண்மர் உயிரிழப்பு, 18 பேர் கைதாகினர்



பாகிஸ்தானின் தென்பகுதியில் ஆப்கானிஸ்தானின் எல்லையுடன் அமைந்துள்ள அங்கூர் அடா மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ள அல்-கொய்டா முஸ்லிம் போராளிகள் மறைவிடங்கள் மீது கடந்த வியாழக்கிழமை பாகிஸ்தானின் விசேட படைப்பிரிவொன்று சுற்றிவளைத்து தாக்குதல்களை மேற்கொண்டது.

14 மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் எட்டுப் போராளிகள் கொல்லப்பட்டதுடன் 18 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கென பாகிஸ்தான் அரசினால் பிரத்யேகமாக பயிற்சி வழங்கப்பட்ட விரைந்து செயற்படும் படையணியே இந்தச் சுற்றிவளைப்புத் தாக்குதலில் ஈடுபட்டது.

அல்-கொய்டா போராளிகளைச் சரணடையுமாறு கேட்டிருந்தும் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதால், அமெரிக்க உலங்குவானூர்திகள் பாகிஸ்தான் படையினருக்கு உதவ முன்வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போர் நடவடிக்கை முழுமையாக தமது படையினரால் நடத்தப்பட்டதெனவும், போராளிகள் ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்கே அமெரிக்க வானூர்திகள் உதவி செய்வதற்கு முன்வந்ததாகவும் பாகிஸ்தானியப் படையினர் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு பத்திரிகையாளர்கள் மிகுந்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட நான்கு போராளிகளது சடலங்களையும் சிறைப்பிடிக்கப்பட்ட முஸ்லிம்போராளிகளையும் காண நேர்ந்ததாக பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

## ஆடை மொடலிங்கில் இந்திய - பாகிஸ்தான் அழகிகள்



இந்திய - பாகிஸ்தான் தலைவர்கள் காஷ்மீர் எல்லைப் பிரச்சினை தொடர்பாக காரசாரமான கருத்துப் பரிமாறல்களில் ஈடுபட்டு வருகின்ற நேரத்தில் இரு நாடுகளையும் சேர்ந்த 'ஆடை அலங்கார மொடல்கள்' பொது மேடைகளில் தமது ஆடை அலங்காரங்களை வெளிப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் மூன்று இந்திய ஆடை அலங்கார நிபுணர்கள் பாகிஸ்தான் சென்றிருந்தார்கள். இந்தியாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ள நிகழ்ச்சிக்கு இவ்வாரம் மூன்று பாகிஸ்தானிய ஆடை அலங்கார நிபுணர்கள் வருவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

## ஷியா முஸ்லிம்களின்

# பள்ளிவாசல் மீதான தாக்குதல் மதக் கலவரத்துக்கு தூண்டுதல்!

(இஸ்லாமாபாத்)

ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்று அண்மையில் பாகிஸ்தானில் தாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மதக் குழப்பங்களுக்கு தூண்டுதலாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் பெரும்பான்மையாக வாழும் மக்கள் சுனி முஸ்லீம்களாகும். சிறுபான்மையினராக ஷியா முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். முகமதுவின் மரணத்தின் பின் இவர்களிடையே ஆரம்பிக்கப்பட்ட மதக்கலவரங்கள் கடந்த ஒரு தசாப்தங்களாக இவ்விரு பிரிவினரிடையேயும் அதிகரித்து வந்துள்ளன.

செம்ரெம்பர் 11 தாக்குதலின் பின் தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர். இதனால், பாகிஸ்தான் ஜனாதிபதி பல தீவிரவாதக் குழுக்களை தடைசெய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

அண்மையில் அதிகரித்து வரும் தாக்குதல் மறைவிடங்களில் இருந்து மதத் தீவிரவாதிகள் மீண்டும் செயற்பட தொடங்கியுள்ளதை வெளிப்படுத்துவதாக பி.பி.ஸியின் சபார் அபாஷ் இஸ்லாமாபாத்



திலிருந்து தெரிவித்துள்ளார்.

இதனிடையே 1979 ஆம் ஆண்டு ஜெனரல் ஷியா உல்ஹக் ஆட்சிக்கு வருவதற்கு பாகிஸ்தான் அரசியலை இஸ்லாமியப்படுத்தி இருந்தமை, மதங்களிடையே பகைமை உண்டாவதற்கு காரணமாக அமைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.




"வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்திலுள்ள மக்களுக்கு போர்நிறுத்தியுள்ள காலத்திலும்கூட பாதுகாப்புப் படைகளினால் பாதுகாப்பில்லாமல் போச்சு" என்று எனது நண்பர் சொன்னார். பன்றி கொழுத்தால் ஒரு இடத்தில் நிற்காது என்றார் மற்றொருவர்.

சமாதானப் பேச்சுக்கள் தொடங்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகத் தயாரித்துவரும் திட்ட வரைபை அரசாங்கத்திடம் கையளித்ததும் விரைவில் சமாதானப் பேச்சுத் தொடங்குமென்றும் அமைச்சர்கள் சிலர் கூறி வருகின்றனர்.

வெளிநாடுகள் சிலவும் சமாதானப் பேச்சை விரைவில் தொடங்கவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன.

அரசபடைகள் போருக்குப் போகமாட்டா என்றும் போரை முதலில் தொடங்கமாட்டோமென்றும் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார்.

ஆனால், வடக்கிலும் கிழக்கிலும் மூலை முடுக்குகளில் எல்லாம் குவிக்கப்பட்டிருக்கும் படையினர், ஆயுதங்களைச் சுமந்துகொண்டு அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கின்றனர்.

கோயில்களுக்கு முன்புகூட காவலரண் என்று மண் மூடைகளை அடுக்கிவைத்துக்கொண்டு தங்களைத் தாக்குவதற்கு யாரோ வரப்போவது மாதிரியும் தங்கள் துப்பாக்கிகளை குறிவைத்தபடி நிற்கிறார்கள்.

நின்ற நிலையிலேயே இவர்களின் எவனாவது ஒருவன் தூங்கித் திடீரென நிமிஷக் கனவு கண்டு விட்டால் துப்பாக்கி வெடித்து விபரீதமாக எதுவும் நடந்துவிடாதா என்றார் நண்பர்.

இப்படித் திடீர் சம்பவம் முன்பொரு தடவை நடந்ததாக நினைவு என்றார் மற்ற நண்பர்.

போர்நிறுத்தம் வெற்றிகரமாக பின்பற்றப்பட்டு வருவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சான்றிதழ் வழங்கியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடமாடினாலும் அவர்களிடம் ஆயுதம் இல்லை. போர்நிறுத்த உடன்படிக்கையின்படி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட முடியாது.

ஆயுதம் ஏந்தியவர்கள் ஆயுதங்களைச் சுமந்து திரியாமல் அமைதியாக நடமாடும்போது அரசபடையினர் ஆயுதங்களைச் சுமந்துகொண்டு அங்குமிங்கும் அலைவதும் காவலரண்களில் துப்பாக்கிகளைக் குறிவைத்தபடி சுடுவதற்காகக் காத்திருப்பதும் எதற்காக என்றார் நண்பர்.

படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்குக் குறுகியகால பயிற்சிதான் வழங்கப்பட்டுச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அத்துடன், போர்நிறுத்தமும் வந்துவிட்டது. ஆதலால், படையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் துப்பாக்கியை எப்படிச் சுமந்து கொண்டிருக்க வேண்டுமென்பதை மறந்துவிடாமல் இருப்பதற்காக இப்படி பயிற்சி கொடுக்கிறார்களாக்கும் என்றார் மற்ற நண்பர்.

அல்லது நீங்கள் ஓடிப்போனாலும் துப்பாக்கிகளையும் கொண்டுபோங்கள், வீசிவிட்டுப் போய்விடாதீர்கள் என்று வலியுறுத்துவதற்காக இருக்கலாம் என்றார் அடுத்தவர்.

அடிக்கடி யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறைக்கும் பலாலிக்கும் ஹெலிகொப்ரர்கள் பறந்துகொண்டே இருக்கின்றன. ஒரேசமயத்தில் இரண்டு மூன்று ஹெலிகளும் பறந்துகொண்டிருக்கின்றன. அப்படி என்ன அவசியமும் அவசரமும் இந்தச் சமாதான காலத்தில் இதற்கு எவ்வளவு செலவாகும்? இதுபற்றி எதிர்க்கட்சி ஏன் கவலைப்படுவதில்லை.

வானத்திலும் விடுதலைப் புலிகள் குரங்குப்பாஞ்சான் முகாம் மாதிரி புதுமுகாம் அமைத்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதோ என்னவோ என்றார் நண்பர்.

சமீபத்தில் இந்துசமய விவகார அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் பேசுகையில், யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி பொன்சேகாவை மக்களே திரண்டு துரத்தியடிக்க நேர்ந்தாலும் நேரும் என்று குறிப்பிட்டிருந்தார்.

கட்டளைத் தளபதியோ மற்றும் படையினரோ இப்படியொரு நிலையைத் தேடிக்கொள்வார்கள் போல்தான் தோன்றுகிறது.

கடந்த மூன்றாம் திகதி மாலை யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியில் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்குச் சமீபத்தில் வேகமாக வந்த இராணுவ ட்ரக் ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளம் வயதினரை மோதி அந்த இடத்திலேயே உயிர்ப்பலி எடுத்திருக்கிறது. இதுமட்டுமல்ல ட்ரக் வண்டியையும் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு திமிர்த்தனமாக முயன்றுள்ளனர். பொது மக்கள் திரண்டு எதிர்ப்புக்காட்டியபோது அவர்கள் துப்பாக்கியை உயர்த்தியிருக்கின்றனர். துப்பாக்கிச் சூடு, கண்ணீர்புகைக் குண்டுத் தாக்குதல் ஆகியன நடந்திருக்கிறது. இஸ்ரேலியப் படையினருக்கு எதிராக பலஸ்தீனியர்களுக் கிழைத்த தமது ஆயுதமாகப் பயன்படுத்துவது போல் இங்கும் கற்களைப் பாவித்துள்ளனர்.

சமீபத்தில் வாழைச்சேனைப் பகுதியிலும் இராணுவ ட்ரக் ஒன்று மோதி இருவர் பலியானார்கள். வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ வாகனங்கள் விபத்தில் சிக்குவது அதிகரித்து வருகிறது. மக்கள் பாதிக்கப்படுவதும் கூடி வருகிறது.

படையினரின் நடமாட்டத்தையும் ஆயுதம் தாங்கித் திரிவதையும் கட்டுப்படுத்த வேண்டும். அல்லது படையினரை இங்கிருந்து திருப்பி அழைக்கவேண்டும். அல்லது அவர்களின் தொகையைக் குறைக்கவேண்டும்.

இல்லையேல் போர்நிறுத்தத்தை படையினரே மீறுவர். பொதுமக்களே அதற்குப் பதிலும் சொல்லவேண்டி வரும் என்றார் நண்பர் உறுதியாக!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எம்மை முட்டாளாக்க முற்பட்டால் மக்கள் போராட்டங்கள் வெடிக்கும்!

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

இராணுவத்தினர் மக்களை முட்டாளாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டால் பொதுமக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். மக்களின் இத்தகைய எழுச்சிகள் இதனையே காட்டி நிற்பதாக, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் யாழ். தண்ணீர் தாங்கியடிப்பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் இராணுவ வாகனத்தால் மோதப்பட்டு கொல்லப்பட்டமை - இராணுவத்தினரின் தமிழ்மக்கள் மீதான பழிவாங்கும் செயற்பாட்டின் தொடர்ச்சியான ஓர் சம்பவம் ஆகும்.

யாழ். குடாநாட்டில் அடிக்கடி இடம்பெறும் வீதி விபத்துக்களில் அனேகமானவை இராணுவ வாகனங்களாலும், மோட்டார் சைக்கிள் படையினராலும் ஏற்படுத்தப்படுகின்றன. மக்கள் செறிவாக நடமாடும் பகுதிகளில் மிதமிஞ்சிய வேகத்தில் வாகனத்தைச் செலுத்தி அப்பாவித் தமிழ்மக்களைக் கொன்றுவருகின்றனர்.

இந்தவகையில், நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவத்தின்போது உணர்ச்சி மேலீட்டால் ஒன்றுகூடிய மக்களை இராணுவம் நடத்திய விதம் கண்டிக்கத்தக்கதாகும். மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் - இராணுவமும், பொலிஸாரும் அங்கு பெருமளவாகக் கூடி எம்மக்களை அடக்கமுற்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்விடத்திற்கு வந்த இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் மக்களை சமாதானப்படுத்தி, அங்கு எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமல் தடுக்கும் நோக்குடன் சென்ற விடுதலைப் புலிப் போராளிகளை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இந்தச் செயற்பாடு புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயற்பாடாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தற்போது நிலவும் தற்காலிக போரற்ற சூழலைக் குழப்பும் விதத்தில் இராணுவத்தினர் நடந்து[illegible]ண்டுள்ளனர். மேலும் இச்சம்பவத்தில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நடந்துகொண்ட விதம் எமக்கு வேதனையைத் தருகிறது. இவர்கள் இனிமேலாவது இத்தகைய பக்கச்சார்பான போக்கைக் கைவிடவேண்டும் என நாம் வேண்டுகின்றோம்.

அதேவேளை, இராணுவத்தினர் இனிமேலும் எம்மக்களை முட்டாளாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டால் பெரும்மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்பதையே மக்களின் இத்தகைய எழுச்சி காட்டிநிற்கிறது. அத்தகைய எழுச்சிகளின் மூலம் எம் தாயகப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்படும் நிலை உருவாகும் என்பதையும் இராணுவத்தினர் புரிந்துகொள்ளவேண்டும் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் [illegible]ரிவிக்கப்பட்டுள்ளது.

## நாற்சந்தி

நேற்று முன்தினம் இராணுவ வாகனம் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த இரு இளைஞர்கள் கோரமான முறையில் பலியானதையடுத்து, கொதிப்படைந்த மக்கள் படையினருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் நேற்றும் தொடர்ந்தன.

பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததுடன், எச்சரிக்கை வேட்டுக்களும் படையினரால் தீர்க்கப்பட்டன.

விவேகமற்ற முறையில் வேகமாக படையினர் ஓட்டிவந்த வாகனத்திற்கு 'பிரேக்' இல்லையென்று கூறப்படுகிறது. அந்த இருவரையும் மோதிய வாகனம் 50 அடி தூரத்திற்கு அப்பால் போயே நின்றுள்ளது.

எல்லாவற்றையும் விட பலியான இருவரின் சடலங்களையும் மோதுண்ட வாகனத்தையும் உடனடியாகப் படையினர் அப்புறப்படுத்தியதுடன், மோதிய வாகனத்தையும் எடுத்துச் செல்ல முயன்ற சட்டவிரோதச் செயலே மக்களைச சினம்கொள்ளச் செய்துள்ளது.

படையினர் சட்டத்தைமீறும் தருணங்களில் மக்களும் சட்டத்தை தமது கையில் எடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். இதுவே பிரச்சினைகள் உருக்கொள்ளும் மையமுமாகிவிடும். நேற்றைய விபத்து தவிர்க்க முடியாமல் இருந்திருக்கலாம். ஆனால், மோதலையாவது இராணுவம் தவிர்க்கும் வண்ணம் நடந்திருக்கலாம்.

அவர்கள் தாங்கிய ஆயுதங்களும் சீருடையும் அவர்களுக்கு அந்த இயல்பை வழங்கவில்லை... அதுவே வெறுங்கை மக்களை வேகங்கொள்ளச் செய்துவிட்டது.

'வல்லவனுக்கு கல்லும் ஆயுதம்' என்கிறார் சம்பவ இடத்தில் இருந்து வந்த ஒருவர்.

-தெருவாசி



# பொதுமக்கள் எதிர்த்து...

பகுதியிலிருந்து விலகிச் சென்றனர். அப்பகுதியில் விட்டுச் சென்ற சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களையும் அடித்து நொறுக்கினர்.

இதேவேளை - சம்பவ இடத்திற்கு வந்திருந்த கண்காணிப்புக் குழுவினரிடம் மடத்தடி இராணுவ முகாமை உடனடியாக அகற்றுமாறும், தவறும் பட்சத்தில் தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். வீதிக்குக் குறுக்கே ரயர்களைப் போட்டு எரித்து தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்திருந்த விடுதலைப். புலிகளின் பிரதிநிதிகள், கண்காணிப்புக்குழுவினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதேவேளை - மடத்தடி முகாமிலிருந்து இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரியபோதிலும் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் சரத் பொன்சேகா மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - சம்பவ இடத்திற்கு சென்றிருந்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அங்குள்ள நிலைமையை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை- உயிரிழந்த லிங்கரூபனின் சொந்த ஊரிலும் மக்கள் வீதி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோண்டாவில் சந்தி, டிப்போ சந்தி ஆகிய இடங்களில் மக்கள் வீதித்தடைகளை போட்டு மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், நேற்று முழுவதும் பலாலி வீதி ஊடான போக்குவரத்து அனைத்தும் தடைப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் நண்பகலுக்கு முன்னர் மூடப்பட்டிருந்தன. நேற்று மாலை வரை மறியற்போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்றன.

## மட்டக்களப்பு....

இரவு ஏறாவூரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒரு பெண் உட்பட மூன்று முஸ்லிம்கள் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோவில் வந்தவர்களே துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள் என்றும் தெரியவருகிறது.

## கருத்துப் பாசறை

(அம்பாறை)

முஸ்லிம் இளைஞர்களுக்கான கருத்துப்பாசறை ஒன்று அம்பாறையிலுள்ள துறைமுக அதிகாரசபையின் ஒலுவில் மகாபொல மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்ட நெஸ்ரோ அமைப்பினர் ஒழுங்குசெய்துள்ள இந்தப் பாசறையில் சுமார் 300 முஸ்லிம் இளைஞர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

அம்பாறை மாவட்ட நெஸ்ரோ தலைவர் யு.எல்.ஆகிர் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம் அரசியலும் சமாதான முனைவுகளும் எனும் தலைப்பில் இந்தப் பாசறை நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எல்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் ரமீஸ் அப்துல்லா, எம்.எம்.பாசில் உட்பட துறைசார்ந்த அறிஞர்களும் பங்குகொள்ளவுள்ளனர். (07)

## படையினருக்கு எதிரான போராட்டம்...

டிருந்த வேளை நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தில் கு.சுஜீகரன் (வயது 19), செ.மகேஸ்வரன் (வயது 27), கி. கருணாகரன் (வயது 23), ப.ரஜீவ்காந் (வயது 17), தி.உதயகுமார் (வயது 27), க.கஜீகரன் (வயது 17), ப.பவீதரன் (வயது 19), அ.லூட்சன் (வயது 20), சி.கபில்ராஜ் (வயது 16) ஆகிய ஒன்பது பேருமே காயமடைந்தவர்களாவர்.

இதேவேளை, தண்ணீர் தாங்கியடியில் இடம்பெற்ற தாக்குதலில் குருநகரைச் சேர்ந்தவர்களான தேவதாஸ் டயஸ் (வயது 28), ஆர்.ராஜேஸ்வர் (வயது 22) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

கோப்பாய் பொலிஸ நிலையத்தைச் சேர்ந்த கே.சேனாரத்ன (வயது 36) என்பவரும் காயமடைந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மேலும் பலர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்து தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (111,09,202)

**பக்க வடிவமைப்பாளர் தேவை**

பத்திரிகைத்துறையில் முன்அனுபவமுடைய Page Maker, CorelDRAW வில் தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. தகுதியானவர்கள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

இல.207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நிர்வாக இயக்குநர் நமது ஈழநாடு

# குவிக்கப்பட்டுள்ள இராணுவம்...

களை அச்சுறுத்தி அகற்ற முற்பட்டுள்ளனர்.

மக்களது எதிர்ப்புக்கு மத்தியிலும் இத்தடயங்களை அகற்ற முற்பட்டமையானது பாதிக்கப்பட்ட மக்களது எதிர்ப்பினை உருவாக்கியது. மக்களும் இயல்பாகவே தமது எதிர்ப்பினைக் காட்டினர். மேலதிக படையினர் குவிக்கப்பட்டு இத்தடயங்கள் அகற்றப்பட்டன.

இராணுவமும், பொலிஸாரும் மக்களைத் தாக்கியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும் மக்களைத் துரத்தமுற்பட்டமையும் மக்களுக்கு ஆத்திரமூட்டின. மக்களும் தமது இயல்பான எதிர்ப்புணர்வை வெளிக்காட்டினர்.

சட்டத்தையும், ஒழுங்கையும் பேணவேண்டிய பொலிஸாரே தடையங்களை அகற்றமுற்பட்டமை மக்களுக்கு சினமூட்டுவதாக அமைந்தது.

மக்களை சீண்டிவிட்டு பரவலான எதிர்ப்பை உருவாக்கிய பொலிஸாரும், படையினரும் தொடர்ந்தும் அடாவடித்தன செயற்பாடுகளை வேட்டுக்கள் தீர்ப்பதன் மூலமும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுவதன் மூலமும், தடியடிப் பிரயோகத்தில் ஈடுபடுவதன் மூலமும் தொடர்ந்தனர்.

நீண்ட நேரத்தின் பின் அங்கு சென்ற கண்காணிப்புக் குழுவினர் நிலைமைகள் கட்டுமீறி செல்வதை அறிந்து யாழ். மாவட்ட அரசியற்துறையினரை உதவுமாறு கேட்டுக் கொண்டனர். அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு 75 மீற்றருக்கு அப்பால் நின்று யாழ். நகர பிரிகேட் கட்டளை அதிகாரியுடனும், பொலிஸ் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.

கனரக ஆயுதங்களுடன் குவிந்திருந்த இராணுவ வீரர்களது பிரசன்னம் மக்களைச் சீண்டுவதாக உள்ளதால் அவர்கள் சம்பவம் நடந்த இடத்திலிருந்து விலகிச்சென்றால் பதற்றநிலையைத் தணிக்கமுடியும் என்று கேட்டதற்கு, பொலிஸ் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர்.

எனினும், அரசியற்துறையினர் மக்களை நேரடியாகச் சந்தித்துப் பதற்றத் தணிப்பை மேற்கொள்ளச் சென்றபோது இராணுவ அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும், கண்காணிப்புக்குழு பார்த்திருக்கக்கூடியதாகவே துப்பாக்கிப் பிரயோகத்தை அரசியற்துறைப் போராளிகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டனர். இது ஒரு கோழைத்தனமான அராஜக செயற்பாடு என்பதையும் மக்களை மேலும் ஆத்திரமூட்டுவதாக அமைந்துள்ளது என்பதனையும் அரசியற்துறையினரின் அமைதிபேணும் நடவடிக்கையை தடுக்கும் முறையிலான கொலை முயற்சியென, இளம்பரிதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கடந்த காலங்களில் இராணுவ வாகனங்களினால் பொதுமக்கள் பலியெடுக்கப்பட்டமையும், காயப்படுத்தப்பட்டமையும் தொடர் நிகழ்வாகவுள்ளது. இதற்கான விசாரணை நடவடிக்கையை கண்துடைப்பாகவே, கரிசனையின்றி பொலிஸ் அதிகாரிகள் மேற்கொள்கின்றனர். இதுவும் மக்கள் ஆத்திரப்படுவதற்கு முக்கிய காரணம்.

சட்டத்தையும். ஒழுங்கையும் பேணவேண்டிய பொலிஸாரே இத்தகைய வன்முறைகளுக்கு துணைபோவது கடுமையாக கண்டிக்கப்பட வேண்டியது என்பதுடன், மனிதநேய விரோதச் செயற்பாடு என்பதையும் இளம்பரிதி விளக்கினார்.

அத்துடன், போர்நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சமாகிய - மக்களுக்கு இன்னல் விளைவியாது இருத்தல் என்பதை அப்பட்டமாக மீறியுள்ளனர் என, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு எடுத்துக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் காட்டப்படும் மக்களது எதிர்ப்பு நடவடிக்கைகளை - பொலிஸாரும், இராணுவமும் மிகக் கொடூரமான முறையில் அடக்கமுயன்று வருகின்றனர். வேண்டுமென்று திட்டமிடப்பட்டு சமாதான செயற்பாடுகளை ஏதோ வகையில் குலைக்கும் தன்மையை இச் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

எனவே, அடாவடித்தனத்தில் ஈடுபடுத்தப்படுவதற்கு குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரும், பொலிஸாரும் உடன் விலக்கிக் கொள்ளப்படுவது அமைதிபேணுவதற்கான அரசியல் செயற்பாடென, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் இளம்பரிதி வலியுறுத்திக் கூறினார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதித் தலைவர் உடனடியாக இதற்கு நடவடிக்கை மெற்கொள்வதாக உறுதி அளித்தார்.

**பழைய மாணவர் சங்கம்**
**சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்**

**அனைத்துலக ஆசிரியர் தினம்**

**06.10.2003 – திங்கட்கிழமை**

எமது பழைய மாணவர் சங்கத்தினராலும், கல்லூ[illegible] மாணவர்களாலும் இணைந்து நடாத்தப்படும்

ஆசிரியர் தினம்

06.10.2003 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர், பழைய மாணவர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(சி/1642)

**சோதிடம்**

45 ஆண்டு காலம் யாழ்/வண்.நீராவியடி பிள்ளையார் கோவில் அருகாமையில் சோதிடத் தொழில் புரிந்து மக்களிடையே நன்மதிப்பும், பிரபலமும் பெற்றவரான **சோதிடமேதை அமரர் S.குருபாலசாமி அவர்களின் இளையவாரிசு சுபா.கணேசலிங்கன்** தற்போது இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். ஜாதகம் கணித்து எழுதுதல், பலன் சொல்லுதல், எண் ஜோதிடம் பார்த்தல், திருமணப் பொருத்தங்கள், நிலையம் பார்த்தல், வீடு வாஸ்து, கிரகதோஷ நிவர்த்திக்கு வழி அறிதல் அனைத்திற்கும் அவரை நேரில் சந்தித்து துல்லியமான பலன்களை அறிந்துகொள்ளுங்கள்.



தொலைபேசி: 222 6339

சோதிடர் சுபா.கணேசலிங்கன்
நியூ ஆனந்தா மேல்மாடி,
NA லொட்ஜ், 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.